# செல்வா தவிர்ந்த ஏனைய எம். பி.க்களுக்கு ஓய்வு

பக்கங்கள் 8 விலை சதம் 30 ★★

ஈழநாடு

The EELANADU

மலர்: 19 மாசி 15 ரபிஅவ்: 7 இதழ்: 16
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26-2-77

## இளைஞர் பேரவை கோருகிறது

யாழ்ப்பாணம், சனி

தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய குழு இன்று கொழும்பில்கூடும்போது வருகிற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர் நியமனம் சம்பந்தமாக முக்கிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும் என்று சொல்லப்படுகிறது.

மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தவிர்ந்த ஏனைய எம். பி.க்கள் அனைவரும் தேர்தலிலிருந்து ஒதுங்கி, இளைஞர்களுக்கும், கட்சியுடன் நெருங்கிய தொடர்புடைய முழு நேரத் தொண்டர்களுக்கும் தேர்தலில் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் என்று தமிழ்

தமிழ் இளைஞர் பேரவையின் பேச்சாளர் ஒருவர் நமது பிரதிநிதியிடம் பேசுகையில், மேற்சொன்ன தீர்மானம் தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய

(8-ம் பக்கம் பார்க்க)

## காசி ஆனந்தன் தேர்தலில்!

### 10,000 இளைஞர் கோரிக்கை

வவுணதீவு, வெள்ளி

கவிஞர் காசி ஆனந்தனை எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் அபேட்சகராக நிறுத்துமாறு 10 ஆயிரம் ஆதரவாளர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக் குழுவைக் கோரியுள்ளனர்.

[8-ம் பக்கம் பார்க்க]

# தமிழர் கூட்டணி வேட்பாளர் பட்டியல் தயாராகிறது

## நல்லூரில் ஆலால்; யாழ்நகரில் யோகேஸ்!

யாழ்ப்பாணம், சனி

**தமிழர் விடுதலைக் கூட்டணியினால் நியமிக்கப்பட்ட அபேட்சகர் தெரிவுக் குழுவினர், தமிழ்பிரதேசங்களில் சில தொகுதிகளைத்தவிர மற்றும் சகல தொகுதிகளுக்கும் அபேட்சகர்களை தெரிவுசெய்துவிட்டதாக தெரியவருகிறது.**

யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், காங்கேசன்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, ஊர்காவற்றுறை ஆகிய தொகுதிகளுக்கு கூட்டணி அபேட்சகர் பற்றிய இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேசமயம், ஒவ்வொரு தொகுதியிலுமிருந்து கூட்டணி அபேட்சகராக போட்டியிட பலர் விண்ணப்பித்துள்ளதாகவும், அபேட்சகர்களுக்கு ஆதரவாக கையெழுத்து பட்டியல்கள் கூட்டணி அபேட்சகர் தெரிவுக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

### நல்லூரில் ஆலால்

யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணி வெற்றிவேலு யோகேஸ்வரனையும், நல்லூரில் சட்டத்தரணி எம். ஆலாலசுந்தரத்தையும் கூட்டணி சார்பில் அடுத்த தேர்தலில் நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள மற்றும் ஒன்பது தொகுதிகளிலும் அநேகமாக தற்போதுள்ள எம். பி. க்களே நிறுத்தப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

உடுப்பிட்டி, பருத்தித்துறை, கோப்பாய் ஆகிய மூன்று தொகுதிகளிலும் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. தினமும் ஆதரவாளர்களிடமிருந்து ஆலோசனைகள் அனுப்பப்பட்டுவருகின்றன.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிழக்குமாகாணத்திலுள்ள தொகுதிகள் பற்றி தற்பொழுது ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது.

கொழும்பு மாவட்டத்தில் சில தொகுதிகளிலும், மலைநாட்டில் சில தொகுதிகளிலும் புத்தளத்திலும், கூட்டணி சார்பில் அபேட்சகர்களை நிறுத்துவது பற்றியும் ஆலோசனை நடைபெற்றுவருகிறது.

நாளை கொழும்பில் மூதறிஞர் செல்வநாயகம்இல்லத்தில் நடைபெறவிருக்கும் தமிழ் இளைஞர்பேரவை மத்தியகுழுக் கூட்டத்தில், கூட்டணிஅபேட்சகர்கள்பற்றி ஆலோசனைசெய்யப்பட்டு, அபேட்சகர்தொடர்பாக கூட்டணிக்கு சிபார்சு செய்யப்படும்.

அக்கரைப்பற்றில் மார்ச் மாதம் 3ம் தேதி நடைபெறவிருக்கும் கூட்டணி நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் கூட்டணி அபேட்சகர்கள் பற்றியும் ஆலோசிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது (க)

## தமிழர்கூட்டணி நல்லூர்க்கிளை

யாழ்ப்பாணம், சனி

தமிழர் விடுதலைக் கூட்டணி நல்லூர்க்கிளை அமைப்புக்கூட்டம் இம்மாதம் 27ம் திகதிபிற்பகல் யாழ். ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டம் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும். (அ)

## உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க

### பிரதமர் நாடும் உதவி

கொழும்பு, வெள்ளி

விவசாயிகளிடம் நேரில் சென்று உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்வதில் ப. நோ. கூ. சங்கங்கள் தீவிரமாக செயற்படவேண்டும். இவர்களின் செயற்பாட்டுக் குறைவுகாரணமாகவே எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களின் விலையில் உயர்வு [illegible] காணப்படுகிறது போல் தெரிகிறது. உற்பத்தியாளர்கள் அதிக பயனடையும் அதே வேளையில் பாவனையாளர்களும் குறைந்த விலையில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவேண்டியது அவசியம் இதில் ப. நோ. கூ. சங்கங்களின் பங்கு துரிதப்படுத்தப் படவேண்டும்''

பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு கூறியுள்ளார். மாவட்ட அரசியல் அதிகாரிகள், மாவட்ட அரசாங்க அதிபர்களின் மாநாட்டில் பிரதமர் பேசினார்.

பிரதமர் இங்கு மேலும் பேசி

(7-ம் பக்கம் பார்க்க)

## புதிய கூப்பன்கள்

### மார்ச்சில் விநியோகம்

கொழும்பு, வெள்ளி

புதிய அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் அடுத்த மாத இறுதியில்நாடு முழுவதும் விநியோகிக்கப்படும் என்று உணவுக்கமிஷனர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலேயே மார்ச் மாத இறுதியில் 29-வது பங்கீட்டுப் புத்தகங்கள் விநியோகிக்கப் படும்.

மே மாத நடுப்பகுதியிலிருந்து அமுலுக்கு வரும் இப் புத்தகங்களை இலகுவில் பெறுவதற்கு அடையாள அட்டைகளைப்பயன்படுத்துமாறும் திணைக்களம் அறிவித்துள்ளது.

## "எமது இளைஞர்வேண்டுவது தமிழ் ஈழவிடுதலையே"

### கவிஞர் காசிஆனந்தன்

வவுணதீவு, வெள்ளி

"காலம் வீண் போய்க்கொண்டிருக்கும் பொழுது சுயநலத் தேவைகளே தமிழனுக்கு முக்கியம் எனச் சிலர் பேசித் திரிகிறார்கள். ஆனால் எமது இளைஞர்களுக்குத் தேவைப்படுவது பாலம் அல்ல; சுதந்திரத் தமிழ் ஈழத்தின் விடுதலைக் கோலம் தான் என்பது தமிழினம் அறியும்''

மேற்கண்டவாறு மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த ஐந்து தினங்களாகச் சிறை வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பிரமாண்டமான வரவேற்பில் கலந்து கொண்டு பேசுகையில் தமிழ இளைஞர் பேரவையின் அமைப்புத் தலைவர்களில் ஒருவரும், த. வி. கூ. செயலாளர்களில் ஒருவருமான கவிஞர் காசி ஆனந்தன் மேற்கண்டவாறு கரகோஷத்தின் மத்தியில் கூறினார்.

கல்லடிப்பகுதியைச் சேர்ந்த விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களான நாகராசா, தேவராசா ஆகிய இருவரும் கல்லடிப்பாலத்தடி சந்தியிலிருந்து மலர்மாலை சூட்டப்பட்டு ஊர்வலமாகத் தத்தம் வீடுகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். இவ்வூர்வலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்புக்கிளையின் சட்டத்துறைச் செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து சமீபத்தில் சிறை மீண்ட இளைஞர்களான திரு. வாளர்கள் அல்போன்ஸ்மேரி,

(8-ம் பக்கம் பார்க்க)

**சங்கானையில்**

## 'பட்டினிப் பாதகத்தை' நிறுத்தப் போராட்டம்!

### பொதுமக்கள் போராட்டக் குழு அறிவிப்பு

### வட்டு. எம். பி. பிரதமருக்குத் தந்தி

சுழிபுரம், வெள்ளி

சங்கானை ப. நோ. கூ. சங்க எல்லைக்குள் வசிக்கும் பாவனையாளர்கள் தமது உணவுப் பொருட்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதிருந்தால் உடனடியாக அவ்வப்பகுதி கிராம சேவையாளர்களுடன் தொடர்புகொள்ளுமாறு வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணசலம் அறிவிக்கிறார்.

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் நடைபெற்றுவரும் வேலைநிறுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் பொது மக்களின் வசதியை முன்னிட்டு கூப்பன் பொருட்களை உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும், இதுவரை தமக்குரிய கூப்பன் பொருட்களை பெற்றுக்கொள்ளாதவர்கள் கிராம சேவையாளர்களுடன் தொடர்கொண்டு கடை விபரங்களைப்பெற்றுக்கொள்ளுமாறும் உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

வேலைநிறுத்தம் முடிவின்டையும்வரை உத்தரவுபெற்ற வர்த்தகர்கள் மூலம் பங்கீட்டுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### தொழிற்சங்கம் கூடுகிறது

இதுஇப்படியிருக்க வேலை நிறுத்த நிலைமைகுறித்து ஆராயும்பொருட்டு மேற்படி சங்க சமாஜக் கிளையின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று நாளை பிற்பகல் பட்டின சபை நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இதில் ஆராயப்படவுள்ளது.

நாளை 27ம் திகதிக்குள்

(8-ம் பக்கம் பார்க்க)

# யாழ்லயன் களியாட்டு விழா-77

(யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக)

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.**

1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்தவிதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன்களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

## போட்டி நிகழ்ச்சிகள்

[1] வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாயஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] அலங்கார பவனியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாணவர் அணிவகுப்பும் 'பாண்ட்' வாத்தியப் போட்டியும், [7] 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத உடைப்போட்டி, [8] 90 மைல் மரதன் சைக்கிள் ஓட்டம் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டம், [10] 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி, [13] படகோட்டப்போட்டி, [14] கராட்டிப் போட்டி, [15] யாழ். ஆணழகன்போட்டி, [16] மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி. [17] யாழ்.அழகு ராணிப் போட்டி,

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும்விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும். 18வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி ..............................
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்: ..............................

விலாசம்: ..............................

வயது: ....................

விளையாட்டுப்போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

..............................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

பெற்றோர் அல்லது பாதுகாவலர்
ஒப்பம்

..............................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11 மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந்தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 9ந் திகதிக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## நீர்த்தொட்டியில் விளையாடிய குழந்தை மரணம்

நீர்வேலி, வெள்ளி

புத்தூர் கிழக்கு சங்கடை கலட்டியைச் சேர்ந்த கந்தன் கிருஷ்ணன் என்பவரின் மூன்று வயதுக் குழந்தை ஒன்று கிணற்றடியிலுள்ள தொட்டியினுள் முகம் குப்புற விழுந்ததனுல் மரணமடைந்தது.

இதுபற்றி விசாரணை நடந்த போது சாட்சியமளித்த குழந்தையின் தாயார் கிருஷ்ணன் லட்சுமி, தனது குழந்தை கிணற்றடியில் தொட்டிக்குள் விளையாடிக் கொண்டு நின்றதாகக் கூறினுர். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. பாலகிருஷ்ணன் விபத்தினுல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். (அ)

# வரி விளம்பரம்

### தேவை

பெண்கஷியரும், ஸ்ரூடியோ வேலையில் அனுபவமுள்ளவர்களும், பழக ஆர்வமுள்ளவர்களும் தேவை. எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்: தரன்ஸ் ரூடியோ-நவீனசந்தை, யாழ்ப்பாணம். 5564

ரேயல் டிஸ்பென்சறிக்கு ஆங்கில அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில் வரவும். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5555

பாண் தயாரிப்பதில் அனுபவம்உள்ள ஒருவரும் பாண் விநியோகம் துவிச்சக்கரவண்டியில் செய்யக்கூடிய ஒருவரும் தேவை. செந்தாமரை பேக்கரி, பாலாவோடை சந்தி, காரைநகர். 5549

### தேவை

தேவன்ஸ் சீயாக்காய்பவுடர் மற்றும் தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5548

### கல்வி

G. C. E. (O/L), G.C.E. (A/L) கலை, விஞ்ஞானம்,வர்த்தகம் இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல் முதலிய பாடங்களுக்கு செய்முறைப் பயிற்சியும் (Pracctial) அளிக்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். [வித்தியா பகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலை] 5558

G.A.Q., G.S.Q., B.A. வகுப்புகள், சட்டக் கல்விப் பட்டப் படிப்பு முதல் பரீட்சை (L.L.B.) வகுப்புகள் வாரந்தோறும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும். உயர்கலைக் கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 5557

### விற்பனைக்கு

உரிமையாளர் வெளிநாடு செல்வதால் உடனடியாக நல்ல நிலைமையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. பாலசிங்கம், அரசடி வீதி, பண்டத்தரிப்பு. 5566

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட மன்றம்

வழ. இல: M B/12278

1. முத்துப் பொன்னையாவின் கைம்பெண் செல்லம்மா உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

வழக்காளி

எதிராக

1. கதிரன் தம்பித்துரை
2. வெள்ளையன் கதிரனும்
3. பெண் சின்னப்பிள்ளை

[ எல்லோரும் உரும்பராய் மேற்கு, உரும்பராய்]

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B/12278-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு தண்டுக் காணியை 1977-ம் வருஷம் பங்குனி மாதம் 21-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 2328-50 சதம் 1-2-71 தொடக்கம் 17-2-72 வரைக்கும் ரூபா 2,000க்கு 12 வீத வட்டியும் அதன் முழுத்தொகை இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 306-50 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பிரிவு வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று உரும்பராய் இறை ''நவிதன்சீமா'' நிலப்பரப்பு மூன்றும் 4 குளியும் வான்பயிர்களும் மேற்கு அறையையும் விருந்தையையும் தவிர்த்து கல்வீடும் கொண்ட ஆதனம். இந்த ஆதனத்தின் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கே முத்தன் நன்னியன் ஆதனம், மேற்கு நாகமுத்தன் பெண் செல்லம்மாவின் ஆதனம், தெற்கு நாகமுத்து பரமலிங்கத்தினதும் கதிரன் தம்பித்துரையினதும் ஆதனம். இந்த ஆதனத்தில் சொரியலாய் அரைப்பங்கும் அதைச் சேர்ந்தவைகளும் மேற்கிலுள்ள ஆதன உரிமையாளன் நாகமுத்துவின் பெண் செல்லம்மாவுக்கு இக்கிணற்றில் பங்கும் வழிவாய்க்கல் உரித்தும் உள.

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
29-1-77

5563

## பதவி வெற்றிடம்

### வெல்டிங் கற்பிப்பவர்

சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூபா 300 — ரூபா 750/- வரை. கல்வித்தகமை அனுபவத்தைப் பொறுத்து வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

நிர்வாகஸ்தர்,
**யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பப் பாடசாலை**
வட்டுக்கோட்டை.

5538

## காணி விற்பனை

### சட்டம்பியார் வள்வு குடத்தனை

குடத்தனை மேற்கில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில், அரசினர் கனிஷ்ட பாடசாலைக்கெதிரில் இருக்கும் வீடும் வளவும் விற்பனைக்குண்டு.

1. குறித்த ஆதனத்துக்குள் கல்வீடுகள், கிணறு தென்னைகள், பனைகள், வடலிகள், புளிகள், வேம்புகள் முதலியன உண்டு. நிலப்பரப்பு 12, குளி 12 10/32 விஸ்தீரணமுடையது.

2. ஒரு ஏக்கர் 11 குளி தோட்ட வளவும், இவ் வீதியில் விற்பனைக்கு உண்டு.

வாங்க விரும்புபவர்கள் 27-2-77 ஞாயிறு காலை 10-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரைக்கும் என்னுடன் தொடர்பு கொள்ளவும். **அல்லது** 1-3-77 தொடக்கம் 3-3-77 வரை கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மாணிப்பாயில் தொடர்பு கொள்ளவும்.

**திரு. யே. எம். இராசரத்தினம்,**
குடத்தனை.

5547

## இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம்

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண வளாகப் பிரதிப் பொருளாளரினுல் பின்வரும் சேவைகளுக்காகப் பொறியிடப்பட்ட கேள்விகள் இணைப்படியில் 1977-03-11-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. தச்சுவேலை — வகுப்பறைகள் அடங்கிய ஒரு கட்டிடத்தின் கூரைக்கு (தொழிலாளர்களும் பொருட்களும்)
2. தச்சுவேலை—கம்பி வலை வேலை — வகுப்பறைகள் அடங்கிய ஒரு கட்டிடத்திற்கு (தொழிலாளரும் பொருட்களும்)

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''தச்சு வேலைக்கான கேள்வி'' எனக் குறிப்பிடப்படவேண்டும்.

வழக்கமான வேலை நேரங்களில் திருநெல்வேலியிலுள்ள அலுவலகத்தில் நேரடியாக உரிய விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். தபால் மூலம் விபரங்களைப் பெற விரும்புபவர்கள் விபரங்களுக்கான விண்ணப்பத்துடன் சுய முகவரியிடப்பட்ட 15 சத முத்திரை ஒட்டப்பட்ட 9''×4''க்குக் குறையாத அளவுடைய தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

**இணைப்பதிவாளர்.**

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1977-02-24.

5567

# ''இந்தியஎதிர்க் கட்சிகளுக்கு வெளி நாட்டு உதவி''

## அனைவரும் அறிந்த உண்மை என்கிருர் இந்திரா

புதுடில்லி, பெப்.25 இந்திய எதிர்க்கட்சியினருக்கு அயல்நாடுகள் சில உதவி வருகின்றன. இது அனைவரும் அறிந்த உண்மை என்று இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

போபாலில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம்ஒன்றில் பேசுகையிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சியினருக்கு மட்டுமல்ல, இந்திய அரசுக்கு எதிரான குழுக்களுக்கு வெளிநாடுகள் சில உதவி வழங்குகின்றன என்றும் திருமதி காந்தி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

### சிறுபான்மையினருக்கு சமஅந்தஸ்து

நாட்டில் ஒற்றுமை நிலவுவதற்கு சிறுபான்மையினருக்கு சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும்.

கட்சிமாறுவதை ஊக்குவிக்கும் எதிர்க்கட்சியினரின்செயல் ஜனநாயகத்துக்கு விரோதமானது. இச்செயல் ஜனநாயகத்துக்குப் பல தீங்குகளை விளைவிக்கும்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவதை நான் எதிர்க்கவில்லை. ஆனல் பல வேறுபட்ட கொள்கைகளும் இலட்சியங்களும் கொண்ட கட்சிகள் எப்படி இணையமுடியும் என்பதுதான் ஆச்சரியமாக உள்ளது. (இ)

## எதிர்க்கட்சியினர் விரும்பியதை செய்வது ஜனநாயகம் அல்ல

### ஜனதா கட்சியினருக்கு இந்திரா காந்தி சாட்டை

புதுடில்லி, பெப். 25 ''எதிர்க்கட்சியினர் தமது விருப்பப்படி எதைவேண்டுமானலும் செய்யலாம்என்பதோ, இரண்டு அல்லது மூன்று கட்சிகளின் இணைப்போ ஜனநாயகம் என்பதன் பொருள் அல்ல. பொறுப்பு என்பதே ஜனநாயகத்தின் பொருள்''

இவ்வாறு தேர்தல் சூருவளி சுற்றுப்பயணம் செய்துவரும் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஒரிஸ்ஸாவில்தெரிவித்தார்.

பல கட்சிகளின் கூட்டணியான ஜனதாகட்சியினர் தாம் ஒரு தனிக்கட்சிதான் என்று கூறிவருகின்றனர். மாறுபட்ட பல கொள்கைகளைக் கொண்ட சனசங், ஸ்தாபன காங்கிரஸ், மார்க்ஸியகம்யூனிஸ்ட், சோஷலிஸக்கட்சி ஆகியன எவ்வாறு இணைந்து ஒரு கட்சியாக முடியும் என்றும் ஜனதா கட்சியினருக்கு ஒருகொள்கையில்லை என்றும் பிரதமர் கூறினர். (இ)

...

### திருட்டு

காரைநகர், வெள்ளி காரைநகரில் உள்ள கடை ஒன்றில் கூரைஓடுகள் பிரிக்கப்பட்டு களவு நடைபெற்றுள்ளது. இதுசம்பந்தமாக ஊர்காவற்றுறைப் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது. (ஆ)

### ஐரோப்பாவில் 59 லட்சம் பேருக்கு வேலை இல்லை

லண்டன், பெப். 25 ஐரோப்பிய சமூகத்தில் சுமார் 59 லட்சம் பேர் வேலையின்றி இருப்பதாக புள்ளி விபரம் ஒன்று கூறுகிறது. கடந்த ஆண்டு இத்தொகை 56 லட்சத்து 50 ஆயிரமாக இருந்தது.

டென்மார்க்கில் 17 சத வீத மக்களும், மேற்கு ஜெர்மனியில் 15 சதவீத மக்களும் வேலையின்றி இருப்பதாக புள்ளி விபரம் கூறுகிறது. இத்தாலியில் 95 சத வீதமக்கள் வேலையின்றி இருக்கிருர்கள்.

கடந்த20ஆண்டுகளில் இப்போதுதான் ஐரோப்பிய சமூகத்தினரில் அதிகமானேர் வேலையின்றி இருப்பதாக பிறேசில்அறிக்கை ஒன்று கூறுகிறது.

### உகண்டா வானெலியின் பயமுறுத்தல்

லண்டன், பெப். 25 உகண்டாமீதுதான்சானியா தாக்குதல் நடத்தியிருப்பதாக உகண்டா இன்று குற்றஞ்சாட்டியது.

அத்துமீறி தன்சானியா உகண்டா மீது இனியும் தாக்குதல் நடத்தினல், தான்சானியா மீது தீவிர இராணுவ விமானத்தாக்குதல் நடததப்படும் என்று உகண்டா எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த எச்சரிக்கையை உகண்டா வானெலி இன்று முழுதும் அடிக்கடி ஒலிபரப்பியது.

தான்சானியாவுக்கு இந்த எச்சரிக்கையை விடுப்பதாக உகண்டா கூறியது. (ஆ)

### புதிய கட்டிடம்

நீர்வேலி, வெள்ளி நீர்வேலி வலிகிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் நீர்வேலி மத்திய கிளைக்கான புதியகட்டிட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. (ஆ)

உகண்டா சம்பவம்:

## சர்வதேச விசாரணையை இடிஅமின் ஏற்க வேண்டும்

### ஐ.நா.செயலாளர் கோரிக்கை

நியூயோர்க, பெப். 25 உகண்டாவின் இரு அமைச்சர்களினதும், மேற்றிராணியாரினதும் மரணங்கள்குறித்து சர்வதேச விசாரணை ஒன்று நடைபெறுவதை உகண்டா ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் உகண்டாவை கேட்டுள்ளார்.

உகண்டா அதிபர் இடி அமினைக் கொலைசெய்யமேற்கொள்ளப்பட்ட முயற்சியைஅடுத்து, அவர்கள் மூவரும் சிறை வைக்கப்பட்ட பின்னர் கார் விபத்தில் மரணமாளுர்கள் என்று உகண்டா அதிபர் அறிவித்திருந்த அதே வேளையில், உகண்டாஅதிபர் இடிஅமினே அவர்கள் மூவரையும் சுட்டுக் கொலை செய்தாரென்று உலக நாடுகள் சிலதெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

### பண்டத்தரிப்பு கி. ச. அஞ்சலி

பண்டத்தரிப்பு, வெள்ளி ''ஈழத்தமிழினத்தின் நல்வாழ்வுக்காக நீண்டகாலமாக பாடுபட்டுவந்த திரு. ஜி. ஜி. யின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்'' என்று பண்டத்தரிப்பு கிராமசபை ஜி. ஜி. யின் மறைவு குறித்து நிறைவேற்றிய தீர்மானத்தில் கூறியுள்ளது. கிராமசபை உபதலைவர் திரு. நீ. பி. இராசநாயகம் கூட்டத்துக்கு தலைமைவகித்தார். (ஆ)

### கி. மு ச. வின் தொழிற்திட்டம்

உடுப்பிட்டி, வெள்ளி புலோலி மேற்குக் கிராம முன்னேற்றச்சங்கம் படித்த வாலிபர்களுக்கான தொழில் திட்டமொன்றைச் செயற்படுத்தவுள்ளது. இதற்கு முன்னேடியாகக் கூட்டுறவுக் கோழிப்பண்ணையொன்று நிறுவப்படவுள்ளது. இக் கூட்டுறவுக் கோழிப் பண்ணையில் படித்த வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று சங்கச்செயலாளர் தெரிவித்தார். (ஆ)

......

### 'சல்யூட்-5' பூமிதிரும்ப தயார்

மாஸ்கோ, பெப். 25 ரஷ்ய விண்வெளி ஆய்வுகூடமான 'சோயுஸ்-24' கலத்துடன் இணைந்து ஆய்வு, நடத்திவந்த 'சல்யூட்-5' வீரர்கள் இருவரும் தமது ஆய்வுகளை முடித்தபின் பூமிக்குத் திரும்புவதற்காக பூமியிலிருந்து உத்தரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிருர்கள் என டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

### புதுச்சேரியில் ராஷ்டிரபதி ஆட்சி நீடிப்பு

புதுடில்லி, பெப் 25 புதுச்சேரியில் ராஷ்டிரபதி ஆட்சி மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆட்சிக்காலம் மார்ச் 28-ம் திகதியுடன் முடிவடையவிருந்தது. (ஆ)

## கோயில்நிதியைதி.மு.கவினர் கட்சிக்கு பயன்படுத்தினர்

### விசாரணைக் குழு அறிக்கை

சென்னை, பெப். 25 தமிழ் நாட்டில் தி. மு. க. ஆட்சிக் காலத்தில் கோவில் அறங்காவலர்களாக இருந்த தி.மு.கவிரர் கோவில் பணத்தையும், தமது பதவிகளையும் துஷ்பிரயோகம் செய்தனர் என்று இது தொடர்பாக விசாரணை செய்தகுழு தெரிவித்துள்ளது.

கோயில் அறங்காவலர்களாக தி.மு.கவினரே அவர்களின் ஆட்சிக்காலத்தில்பெரும்பான்மையாக நியமிக்கப்பட்டனர். என்றும் இவர்கள் கோவில் நிதிகளையும் காணிகளையும் தமது உறவினர்களினதும்கட்சியினதும் நலனுக்கு பாவித்து வந்தனர் என்றும் அக்குழு தெரிவித்தது. (இ)

மானிப்பாய், சனி தெய்வீக ஒளிச் சங்கத்தின் உரும்பிராய் ஆச்சிரமத்தில் இன்று மாலை சற்குரு மகாராஜின் ஞான அறிவு பற்றிய உரைகளும், தியானமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஆ)

### முன்னுள் பங்களாதேஷ் அதிபருக்கு 5 வருடக் கடுங்காவல்!

டாக்கா, பெப். 25 பங்களாதேஷின் முன்னுள் அதிபர் ஜஹைப் முஷ்டாக் அகமட்டுக்கு விசேட இராணுவ நீதிமன்றம் 5 வருடகடுங்காவல் தண்டனை விதித்துள்ளது.

பதவியிலிருந்த போது அதிகாரத்தைத் தவருகப் பிரயோகித்ததாகக் குற்றம் சாட்டியே இவருக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது.

கடுங்காவல் சிறையுடன் 3,900 ஸ்டேர்லின் புவுண் அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறினல் மேலும் ஒரு வருடகடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் விசேட நீதிமன்றம் உத்தரவிட்டது. (இ)

## இந்தியத் தேர்தல் அரங்கு

### வாக்குகளைப் பணத்திற்கு விற்கவேண்டாம்

எதிர்வரும் தேர்தலில் மக்கள் தமது வாக்குகளைப் பணத்திற்காக விற்க முன்வரக்கூடாதென்று சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கேட்டுள்ளார்.

### இந்தியா பிச்சை வாங்கும் நாடு...?

இந்தியாவைப் பொருளாதார ஸ்திரமுள்ள நாடாக ஆக்குவதை விடுத்து, பொருளாதாரப் பிச்சை வாங்கும் நாடாக அரசாங்கம் மாற்றிவருகிறதென்று ஜனதாகட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

### 30 பெண் வேட்பாளர்

இம்முறை தேர்தலில் 30 பெண்கள் மட்டுமே போட்டியிடுகின்றனர். கடந்த 71ம் ஆண்டுத் தேர்தலில் 86 பேர் போட்டியிட்டனர்.

### ஜனதா-538, காங்கிரஸ்-492

540 லோகசபைத் தொகுதிகளில் காங்கிரஸ் 492 இடங்களிலும், ஜனதா 538 இடங்களிலும், கம்யூனிஸ்ட் 50 இடங்களிலும் போட்டியிடுகின்றன.

## அரசு நிதியை காங்கிரஸ் தேர்தலுக்கு பயன்படுத்துகிறது

### ஜனதர் கட்சி ஜனதிபதிக்கு புகார்

புதுடில்லி, பெப். 25 அரசாங்க பொதுப் பணத்தை காங்கிரஸ்கட்சியினர் தமது தேர்தல்பணிகளுக்குப் பயன்படுத்துகின்றனர் என்று ஜனநாயகக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பான புகார் ஒன்றையும் ஜனதா கட்சியினர் பதில் ஜனதிபதி திரு. ஜட்டியிடம் சமர்ப்பித்துள்ளனர்.

பொதுப்பணத்தை ஒருகட்சி தனது தேர்தல் பணிகளுக்குப் பயன்படுத்துவது ஜனநாயகத்திற்கு விரோதமானசெயல்என்றும் தொடர்ந்து இவ்வாறு செய்யவேண்டாமென்று அக்கட்சியினருக்கு பணிக்குமாறும் ஜனதிபதிக்கு அனுப்பியுள்ள புகாரில் ஜனதாகட்சிகேட்டுள்ளது. (இ)

### மணிவாக்கு

ஒழுங்கு, தியாகபுத்தி, பணிவு, திடசித்தம் ஆகிய குணங்களை அளிப்பதில் உண்ணாவிரதத்திற்கும் பிரார்த்தனைக்கும் உள்ளதைப் போன்ற சக்தி வேறெதற்கும் கிடையாது.

--மகாத்மா காந்தி

ஈழநாடு
THE EELANADU

## ஆயுள்வேதக் கல்லூரி

ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மேமாதத்திலிருந்து பல்கலைக் கழகத் தரத்திற்கு உயர்த்தப்படவிருக்கும் செய்தி மகிழ்ச்சியளிப்பதாகும்.

ஆரம்பத்தில் இது பல்கலைக்கழகத்தில் ஒரு கழகமாகஇயங்கும். பின்னர் இது கொழும்பு வளாகத்தின் கீழ் கொண்டு வரப்படுமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன

ஆயுள்வேதத்துக்குப் புத்துயிரளிக்கவேண்டுமென்பது காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கை.

1956ம் ஆண்டில் அவர் பிரதமராக வந்தபோது இதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

நாவின்னையில் ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது.

இந்த ஆராய்ச்சி நிலையம் சிறப்பாகச் செயல்பட்டுவருகிறது.

ஆயுள்வேதமருந்துகளுக்கு இந்தியாவையே பெரும்பாலும் நமது நாடு நம்பியிருந்த காலம் இருந்தது.

இப்போது ஆயுள்வேத மூலிகைகளை வளர்த்து இங்கேயே மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தனிப்பட்ட ஆயுள்வேத வைத்தியர்கள் மருந்துகளைத் தயாரிப்பதற்கும் ஊக்கம் அளிக்கப்படுகிறது.

ஆயுள்வேத வைத்தியநிலையங்கள் நாட்டின் பல பாகங்களிலும் திறக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்கள் பலவும் ஆயுள்வேத வைத்திய நிலையங்களை நடாத்துகின்றன.

இதனுல் பொதுமக்கள் பலரும் பெரும் பயனடைகின்றனர்.

தென்னிலங்கையில் ஆயுள்வேத வைத்தியம் போன்று வட இலங்கையிலும், கிழக்கிலங்கையிலும் தொன்று தொட்டு இருந்துவருவது சித்த வைத்தியம்.

ஆயுள்வேத வைத்தியத்திற்குக் கிடைத்துவரும் ஊக்கமும், உதவியும் சித்த வைத்தியத்நுக்குக் கிடைக்கிறதெனச் சொல்லமுடியாது

யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுள்வேதக்கல்லூரி ஒன்று நீண்ட காலமாக இயங்கி வருகிறது.

பாழடைந்த ஒரு பழைய கட்டிடத்தில் இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கிறது

இந்தக்கல்லூரியில் படித்துப் பட்டம்பெற்ற மாணவர்கள் பலர் நாட்டின் பல இடங்களில் நல்ல பெயருடன் சேவை செய்து வருகின்றனர்.

இந்தக்கல்லூரி வழங்கிய பட்டத்தை அரசாங்கம்அங்கீகரித்து வந்ததால்தான் இங்கு படித்துப் பட்டம் பெற்றவர்கள் நற்பெயருடன் சேவை செய்து வர முடிந்தது.

ஆனுல் கடந்த சில வருடங்களாக யாழ்ப்பாண சித்த ஆயுள்வேதக் கல்லூரி வழங்கும் பட்டத்தை அரசாங்கம் அங்கீகரிக்கமறுத்து வருகிறது.

சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தசுகாதார அமைச்சர் திருமதி சிவகாமி ஒபயசேகரா இந்தக் கல்லூரியின் குறைகளை ஆராய்ந்து சென்றிருக்கிறுர்.

ஆவன செய்வதாகவும் உறுதியளித்துச் சென்றிருக்கிறுர்.

கைதடியில் ஆயுள்வேத வைத்தியசாலையும்ஆயுள்வேதக்கல்லூரியும் நல்லமுறையில் கட்டிமுடிக்கப் பெற்றுள்ளன.

மருந்துச்சாலை மட்டுமே இப்போது செயல்படுகிறது.

கல்லூரியும் வைத்தியசாலையும் இன்னமும் திறக்கப்படவில்லை.

யாழ்ப்பாண நகரில் பாழடைந்த பழைய கட்டிடத்தில் இயங்கிவரும் சித்த ஆயுள்வேதக் கல்லூரியைக் கைதடி ஆயுள்வேதக் கல்லூரியுடன் இணைப்பதன் மூலம் பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

இங்கு படிக்கும் மாணவர்கள் பட்டம்பெற்றும் பயனில்லாமல் வீதியில் கண்கலங்கி நிற்கவேண்டிய நிலையும் இல்லாமற்போகும்.

கைதடி ஆயுள்வேதக் கல்லூரியுடன் சித்த ஆயுள்வேதக் கல்லூரியையும் இணைத்து அதன் தரத்தை உயர்த்தவேண்டியது அவசியம்.

இவ்விதம் செய்தால் காலப்போக்கில் சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியை யாழ்ப்பாண வளாகத்துடன் இணைப்பதற்கான வாய்ப்பு ஏற்படுமென எதிர்பார்க்கலாம்.

### ஆசிரியருக்குக் கடிதம்:

## சாப்பாட்டின் விலை

மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, வெளி மார்க்கட்டில் விலையும் அதிகரித்தபொழுது நகர சாப்பாட்டுக் கடைகள் யாவும் தின்பண்டங்களின் விலைகளை அதிகரித்தன. இடியப்பம், பிட்டு, தோசை, இட்டிலி போன்ற பதார்த்தங்களின் விலைகள் 5 சதத்தால் அதிகரிக்கப்பட்டன. அரிசி விலையும் அதிகரித்ததால் சாப்பாட்டின் விலையைச் சில கடைகள் 25 சதத்தாலும் இன்னும் சில 50 சதத்தாலும் அதிகரித்தன.

மாவு தட்டுப்பாடு நீங்கியவுடன் பலகாரங்களின் விலைகள் ஓரளவு குறைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனுல் சோற்றின் விலையைமாத்திரம் இந்தக் கடைக்காரர்களில் பலர் இன்னமும் குறைக்காமலிருப்பது கவலைக்குரியது.

கடைகளையே நம்பியிருக்கும் மக்களில் தொழில்புரியும் பலர் இதனுல் பெரிதும் பாதிக்கப்படுகிறுர்கள். அரிசியின் விலை வெளி மார்க்கட்டில் இப்பொழுது 3 ரூபாய்க்குக் கிடைக்கக் கூடியதாய் இருக்கின்றது. இந்த நிலைமையில் சோற்றின் விலையை வெகுவாகக் குறைக்க முடியும். அரிசி விலை கூடிய போது சோற்றின் விலையைக் கூட்டியவர்கள் அது குறைந்த போது ஏன் குறைக்கலாகாது.

கடையை நம்பிவாழும்

நகரவாசி

யாழ்ப்பாணம்.

### இந்திய இசைத்தாயின் செல்லப்பிள்ளையாகிவிட்ட

# பிடில் எனப்படும் வயலின்

— திருமதி மாதினி சிறீக்கந்தராசா பி. ஏ. —

பிடில் என்ற சொல் தமிழ்ச் சொல்லா வேற்று மொழிச்சொல்லா என்று கேட்டால் சிலருக்கு ஐயம் தோன்றும். அது ஆங்கிலச் சொல் என்று கூறினுல் பலருக்கு வியப்புத் தோன்றும். ஏனென்றுல் பிடில் என்ற சொல்லிலே தமிழ்ச்சாயல் நிரம்பியிருக்கிறது. ஆங்கில மொழியில் இருந்து கடனுகப் பெறப்பட்ட பிடில், தமிழாகவே மாறிவிட்டது. Fiddle என்ற ஆங்கிலச் சொல்தான் தமிழில் பிடில் ஆகத் 'திருவவதாரம்' எடுத்துள்ளது. கதிரை, பிக்கான், ஆமார், பாண், அலுமாரி, அலவாங்கு முதலிய சொற்கள் வேற்று மொழிகளிலிருந்து பெறப்பட்ட சொற்கள் என்று கூறினுல் யார்தான் நம்ப முடியும்? ஆனுல் உண்மை அதுதான்.

கடனெடுக்கும் பழக்கம் தமிழ்மொழிக்கு மட்டும்தான் உண்டென்று நினைத்துவிடாதீர்கள். இங்கிலீசும் எம்மிடமிருந்து இரவல்வாங்கியிருக்கிறது. Pandal, Curry, Mango, Murunga, Ginger Poon, Betel, Mulligatawny ஆகிய சொற்கள் ஒக்ஸ்போட்டு அகராதியில் இடம்பெற்றுவிட்ட சொற்கள். இவை முறையே, பந்தல் கறி மாங்காய் முருங்கை இஞ்சி புன்னை வெற்றிலை மிளகுதண்ணீர் ஆகிய தமிழ்ச்சொற்களில் இருந்து புனர்ஜன்மம் எடுத்த சொற்களே.

சொல்லாராய்ச்சி செய்வதல்ல இங்கே என்னுடைய நோக்கம். தவில் என்ற சொல்லுப்போல ஒலிக்கின்ற பிடில், இரவலெடுக்கப்பட்ட சொல் என்பதையும் இரவல் எடுக்கும் பழக்கம் மொழிகளுக்குப் புதியதல்ல என்பதையும் விளக்கவே இவற்றைக் கூறினேன்.

பிடில் என்றுல் என்னஎன்று புரிந்துகொள்ளமுடியாதவர்களும் இருக்கிறுர்கள். வயலின் என்றுல்தான் அவர்களுக்கு விளங்கும். வயலின் வேறு பிடில் வேறு என்று எண்ணுபவர்களும் இருக்கிறுர்கள். ஆனுல் பிடிலும் வயலினும் ஒன்றே. பிடில் என்ற சொல் இப்போது வழக்கொழிந்துவிட்டது. வயலின் என்ற சொல்தான் பெருவழக்காகப் புழங்குகின்றது. Fiddle என்பது பழம்பெயர். Violin என்பது புதுப்பெயர். 'உரோமாபுரி தீப்பற்றி எரியும்பொது நீரோமன்னன் பிடில்வாசித்தானும்' என்ற பழமொழியில் இருந்து இந்தஉண்மையைதெரிந்துகொள்ளலாம். நீரோ Nero என்பவன் உரோமாபுரியை ஆண்ட அரசர்களில் ஒருவன். இவன் கி. பி. 54-ம் ஆண்டளவில் உரோமாபுரியின் மன்னனுக இருந்தான். என்று வரலாறு கூறுகின்றது. எனவே பிடில் என்ற வாத்தியம் கி.பி. 54க்கு முன்பிருந்தே உரோமாபுரியில் புழக்கத்திலிருந்தது என்பதை உணரலாம்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இறப்பர் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு ரயர், ரியூப் என்பனவாக இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுவதை நாம் அறிவோம். இந்த ரயருக்கும் ரியூப்புக்கும் மூலமாயுள்ள இறப்பர் இலங்கையிலிருந்துதான் வெளிநாட்டுக்குப் போனது என்பதை நம்புவதே கடினமாக இருக்கிறது. இவ்வாறே ஆங்கிலச் சொல்என்று எம்மால் நம்பப்படும் சொற்கள் பல தமிழ்ச் சொற்களே என்பதை நாம்அறியும்போதுவியப்பேற்படுகிறது. Corundum என்று ஓர் ஆங்கிலச்சொல் உள்ளது. இதை மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டவர்கள், அது ஆங்கிலச்சொல்லென்று எண்ணி 'கொரண்டம்' என்று ஒலி பெயர்த்தார்கள். ஆனுல் Corundum என்ற ஆங்கிலச் சொல் 'குருந்தம்'என்றதமிழ்ச் சொல்லின் ஒலிபெயர்ப்பு என்பதைத் தமிழறிஞர் ஒருவர் சுட்டிக்காட்டியபோது 'கொரண்டம்' என்று ஒலி பெயர்த்தவர்கள் தலைகுனிந்தனர்.

இப்படி ஒரு கதை வயலினுக்கும் உண்டு என்று கூறப்படுகின்றது. வயலின் மேற்கத்திய இசையாகக் கருதப்படுவதாகத் தொடக்கத்திலே குறிப்பிட்டேன். நீரோ என்பவன் பிடில் வாசித்த கதையையும் குறிப்பிட்டேன். இருப்பினும், வயலின் மேற்கத்திய இசைக்கருவி அல்ல அது இந்திய இசைக் கருவியே என்றுமேனுட்டு அறிஞர் சிலர் கூறுவது வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. எனினும் இன்று நாம் பயன்படுத்தும் வயலினை நாம்மேற்கு நாட்டாரிடமிருந்து அண்மைக் காலத்திலே பெற்றேும் என்பதில் சந்தேகமேயில்லை.

வயலினைநாம் தத்தெடுத்துச் சுவீகாரம் செய்து ஒரு நூற்றுண்டுக்குமேல் ஆகிவிட்டது. இந்திய இசைக்கருவிகளின் ஒரு சகோதரனுக இது ஆகிவிட்டது மட்டுமல்லாமல் இந்திய இசைத்தாயினுல் மிகவும் விரும்பப்படும்ஒரு பிள்ளையாகவும் இது ஆகிவிட்டது. இதனுல் வேற்றுநாட்டாரின் இசைக்கருவி என்ற நினைப்பும் நம்மிடமிருந்து நீங்கிவிட்டது. மேற்கு நாட்டாரிடமிருந்து நாங்கள் பெற்றுக்கொண்ட இசைக்கருவிகளில் மிகப் பழைமையானது வயலின்என்றுல் பிழையாகாது. கிளாரினெட், ஆமோனியம் என்ற இரண்டும் இரவலெடுக்கப்பட்ட வாத்தியக் கருவிகளே. வயலின் எப்படி இந்திய இசையில் நுழைந்தது என்பதை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

### "நொதேண் ஸ்போட்ஸ்

## வடபகுதியின் குறையை நீக்கியுள்ளது"

### யாழ். அரசாங்க அதிபர் பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

ஈழத்தில் பல சஞ்சிகைகள் வெளிவந்த வண்ணமேயிருக்கின்றன. ஆனுல் வடபகுதியிலிருந்து இதுவரை காலமும் விளையாட்டுத்துறை பற்றிய சஞ்சிகைவெளிவந்ததேயில்லை. இதை நிவிர்த்தி செய்யவெளிவந்துள்ள 'நொதேர்ண் ஸ்போட்ஸ்' சஞ்சிகையின் பெயர் சரித்திரப் பொன்னேடுகளில் பொறிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. பத்திரிகை ஒன்று நடத்துவது எவ்வளவு கஷ்டம் என்பது பல பத்திரிகைகளை நடத்தியவர்களுக்கு அனுபவரீதியாக புரிந்திருக்கும்' என்று கடந்த புதன் கிழமை யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபால திரு. இ. இராஜேந்திரராஜாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள 'நொதேர்ண் ஸ்போட்ஸ்' மாத சஞ்சிகையின் முதலாவது இதழை கச்சேரியிலுள்ள அவரது காரியாலயத்தில் வைத்துப் பெற்றுக் கொண்டு ஆசியுரை வழங்குகையில் தெரிவித்தார்.

'நொதேண் ஸ்போட்ஸ்'பல விளையாட்டுச் செய்திகளை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. இது மாணவர்களுக்கும், விளையாட்டுத்துறையைப் பயில்வோருக்கும் உதவி புரியும் என நினைக்கிறேன். உதாரணமாக இச் சஞ்சிகையில் வெளிவந்துள்ள ஜெயா கனகநாயகத்தின் கிரிக்கெட் பற்றிய கட்டுரையைப் படிப்பவர்கள் கிரிக்கெட்டைப் பற்றி அறிவதுடன் கிரிக்கெட் வீரர்களாகவே மாறிவிடுவார்கள் போலிருக்கிறது. கிரிக்கெட் மட்டுமல்ல மற்ற எல்லா விளையாட்டுத் துறைகளைப் பற்றியும் இச்சஞ்சிகையில் விடயதானங்கள் இடம் பெற்றுள்ளன.

இவரது இந்த சீரிய முயற்சி வெற்றிபெற என் நல்லாசிகளை வழங்குவதோடு ஈழத்தின் விளையாட்டு வீரர்கள், பள்ளிக்கூட மாணவர்கள், விளையாட்டுத்துறை ரசிகர்கள் பாரிய முயற்சிக்கு ஆதரவளிப்பார் என்று நம்புகிறேன்' என்று அரசாங்க அதிபர் தமது ஆசியுரையில் தெரிவித்தார். (அ)



யாழ். நகரில் முதன் முதலாக வெளிவந்திருக்கும் விளையாட்டுத்துறைசம்பந்தமான''நொதேர்ண்போட்ஸ்'' மாத ஏட்டின் முதல் பிரதியை, யாழ். அரசாங்க அதிபர் திரு. லால் விஜயபாலாவிடம் கையளித்து, அதன் அம்சங்களைப் பற்றி விளக்குகின்றுர் ஆசிரியர் திரு. இ. ராஜேந்திரா.

(படம்: பிரபா போட்டோ 'தேவா')

## பேதி உப்பு உற்பத்தி

கொழும்பு, வெள்ளி

தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் அம்பாந்தோட்டையில் பேதி உப்பை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டுவருகிறது.

வருடாந்தம் ஆயிரம்தொன் பேதி உப்பு உற்பத்தி செய்யப்படுமென்று கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

# "தமிழ் இளைஞர்களுக்கு தேர்தல்ஆசை வேண்டாம்"

## உரும்பராய் சத்தியசீலன் உரை

யாழ்ப்பாணம், சனி

'தமிழ் இளைஞர்களுக்குமட்டும் தேர்தல் ஆசை வேண்டாம். தமிழ் ஈழத்தை உருவாக்கும் பணியில் தம்மை அர்ப்பணித்திருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆயிரம் பணிகள் காத்திருக்கின்றன. தமிழ் ஈழப் போராட்டத்திற்கான நல்ல பல திட்டங்களைச் சிந்தித்துத் திட்டங்களுடன் வெளியே வந்துள்ளோம். அத்திட்டங்களுக்குத் தலைவர்களது அங்கீகாரம் கிடைத்ததும், அவை செயல்படுத்தப்படும்.'

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் நடந்த கருத்தரங்கில் சிறை மீண்ட, உரும்பராய் சத்தியசீலன் மேற்கண்டவாறு கூறினார்.

சட்டத்தரணி வெ. யோகேஸ்வரன் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. சத்தியசீலன் மேலும் கூறியதாவது:-

போராட்டங்கள், அர்ப்பணிப்புகள், இரத்தம் சிந்துதலின்றி தமிழ் ஈழம் மீளப் போவதில்லை. தேர்தல்களாலும், பாராளுமன்றம் செல்வதாலும் தமிழ் ஈழத்தைத் தோற்றுவிக்க முடியாது. அதற்காக தேர்தல்வேண்டாம் என நான் கூறமாட்டேன். தேர்தல் நடக்கத்தான்வேண்டும். ஆட்சிமன்றம் போகத்தான் வேண்டும்.

### ஆட்சி மன்றம் நல்ல மேடை

'இன விரோதிகள் ஆட்சி மன்றம் செல்வதைத் தவிர்க்க தேர்தலை நாம் சந்திக்கவே வேண்டும். ஆட்சிமன்றம் ஒரு நல்ல மேடை. தமிழ் ஈழத்தில் நடைபெறும் காலனி ஆட்சியையும், தமிழ் ஈழப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் அடக்கு முறைகளையும், உலகிற்கு அம்பலப்படுத்துவதற்காகவேனும், ஆட்சிமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் இருக்கவேண்டும். ஆனால் தமிழ் இளைஞர்களுக்கு தேர்தல் ஆசைவேண்டாம் அவர்களுக்கு ஆயிரம் பணிகள் காத்திருக்கின்றன. ஆகவே தமிழ் இளைஞர்களைப் பொறுத்தமட்டில் தேர்தல்களில் அவர்களுக்கு விருப்பமோ நாட்டமோ இருக்கக்கூடாது என்பதே எமது தீர்க்கமான முடிவாகும்.

### தமிழ் இளைஞர் ஒன்றியம்

நான்பல்கலைக்கழகம் செல்லுமுன்னரே 1966-ல் பல்கலைக்கழக மாணவர்கள் சேர்ந்து தமிழ்ஈழவிடுதலைக்கு உழைப்பதற்குத துணிந்து 'தமிழ் இளைஞர் ஒன்றியத்தை ஆரம்பித்தார்கள். விஞ்ஞானபீட மாணவர்களே அப்போது அதில் கூடுதலாகச் சேர்ந்து உழைத்துவந்தனர். நான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்ததும், தமிழ் இளைஞர் ஒன்றியத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டேன். அதன் பின்பே கலைப்பீட மாணவர்களும் பெரும்தொகையினராக தமிழ் இளைஞர் ஒன்றியத்தில்சேர்ந்து கொண்டனர்.

### பேராசிரியர் ஆதரவு

தமிழ்இளைஞர்ஒன்றியத்தை ஆரம்பித்தநேரத்தில் அதற்கு தமது அங்கீகாரத்தைத் தந்ததோடு முழுமூச்சாக அதற்கு ஒத்துழைப்பு நல்கியவர்காலஞ்சென்ற பேராசிரியர் கனகசபாபதியே.

''இப்போதிருந்தே பல்கலைக்கழக மாணவர்களாகிய நீங்கள் தமிழ்ஈழ விடுதலைக்காகப் பாடுபடுங்கள். உரிய காலகட்டத்தில் தமிழ்த்தலைவர்களும், தமிழ் ஈழவிடுதலை கோரிக்கையை முன்வைப்பார்கள்'' என்று பேராசிரியர் கனகசபாபதி அப்போதே தெரிவித்த கருத்து இன்று நிறைவேறிய தீர்க்கதரிசன உரையாகிவிட்டது.

பேராசிரியர் கனகசபாபதி அமரராகிவிட்டதால் நான் இதனை வெளியிடுகிறேன்.

### ஒன்றியத்தின் தலைவரானேன்

எனது பல்கலைக்கழகப் படிப்பின் இறுதியாண்டுப்படிப்பின் போதே நான் தமிழ் இளைஞர் ஒன்றியத்தின் தலைவரானேன். பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு நான்பட்டதாரியாக வெளிவந்தேன். அந்த நேரத்தில் தான் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு இனவாரியான தரப்படுத்தல் வந்தது. நான் பட்டதாரியாகி விட்டபோது, என் தமிழ்ச்சகோதரர் தமிழர் என்ற ஒரே காரணத்தால் பல்கலைக்கழகம் போகமுடியாது தடுக்கப்பட்டதைக்கண்டு குமுறினேன்.

### தமிழ் மாணவர் பேரவை

சிங்கத்தமிழன் சிவகுமாரன் போன்ற துடிப்பு மிக்க தமிழ்க் காளையரோடு சேர்ந்து தமிழ் மாணவர் பேரவையைக்கூட்டி தரப்படுத்தலுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை யாழ். நகரில் நடத்தினோம். அதனைத் தொடர்ந்து முற்றவெளியில் மாணவரின் ஒரு பொதுக் கூட்டமும் நடைபெற்றது. ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டவர்கள் மாணவர்களே. அரசியல்கட்சித் தலைவர்கள் அவற்றில் பங்குபெற நாம் இடந்தரவில்லை. எம்மைப் பொறுத்தவரையில்தமிழர்விடுதலைக்கூட்டணிக்கு நாம் நன்றியுடையோம். தமிழ் இளைஞர் ஒன்றியமாக ஆரம்பித்துதமிழ்மாணவர் பேரவையாக வளர்ச்சி அடைந்த எமது இளைஞர்இயக்கத்தை தமிழ் இளைஞர் பேரவையாக மலர்வித்துத்தந்தமைக்காக தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் ஈழ விடுதலைக்குத் தன்னை அர்ப்பணிக்கும் தலைவர்களது அன்புக் கட்டளைக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து பணிந்து நடக்கும் என்று கூறிக்கொள்கிறேன்''

சட்டத்தரணி ஆர். விஸ்வநாதனும் உரையாற்றினார். (க—அ)

### பரிபாலன சபை

வேலணை, வெள்ளி

புங்குடுதீவு தல்லைப்பற்று முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த மகாசபைக் கூட்டம் மேற்படி கோவில் மண்டபத்தில் தற்காலிகத் தலைவர் திரு. ச. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்கள்.

தலைவர்: திரு. செ. தில்லைநாதன் ஜே. பி., உபதலைவர்: திரு. ச. பொன்னம்பலம், காரியதரிசி: திரு. சோ.சேனாதிராசா, உபகாரியதரிசி: திரு. சி. ரவீந்திரராசா, தனாதிகாரி: சட்டத்தரணி மு. நேமிநாதன் செயற்குழுவும் தெரிவுசெய்யப் பட்டது. (ஆ)

# வேலைக்காரச்சிறுவனை கம்பியால் சுட்டாராம் பெண்

மாவிட்டபுரம், வெள்ளி

அநாதரவான முறையில் திரிந்த சமயம் கைதானவேலைக்காரச் சிறுவனை சிறுவர் சீர்திருத்தப்பாடசாலையில் சேர்க்குமாறும், அச்சிறுவனைத் துன்புறுத்தியதாகக் கைதான பெண்ணை 1000 ரூபா பிணையில் செல்லுமாறும் மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த செல்லத்துரை இராசம்மா என்ற பெண்ணின் வீட்டில்வேலைக்கிருந்த கம்பளையைச் சேர்ந்த எஸ். செல்லா என்னும் 12 வயதுச் சிறுவன் யாழ்ப்பாணத்தில் அநாதரவான முறையில் திரிந்தசமயம் யாழ். பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் காங்கேசன் துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்.

காங்கேசன்துறைப்பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தபொலிஸ் கான்ஸ்டபிள் திரு. பதூர்தீன் பிரஸ்தாப சிறுவனை விசாரணை செய்த சமயம் அச்சிறுவன் மேற்படி பெண்ணின் வீட்டில் தான் வேலைக்கிருந்ததாகவும், அதிகாலையில் நித்திரை விட்டெழத் தாமதமாகியதால் தம்மை ஏசிய அப்பெண் இரும்புக்கம்பியை நெருப்பில் காய்ச்சிக்காலில் சூடு போட்டதாகவும், அவ்வேதனையால் தாம்அவ்வீட்டில் இருக்கவிருப்பமின்றி எவருக்கும்தெரியாது புறப்பட்டு யாழ்ப்பாணம் சென்றதாகவும் தெரிவித்தார்.

இதையடுத்து இச்சிறுவனுடன் மேற்படி பெண்ணையும் கைதுசெய்து மல்லாகம் நீதிபதி முன் காங்கேசன்துறைப் பொலிசார் ஆஜர்செய்தனர். நீதிபதி திரு. டி. யேசுரத்தினம் சிறுவனை அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப்பாடசாலையில் அனுமதிக்குமாறும், பெண்ணை 1000 ரூபா பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டு அவர்கள் மீதான விசாரணையை வேறொரு திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

### ஸ்தாபகர் தினவிழா

வல்வெட்டித்துறை, வெள்ளி

வடமராட்சி உபமாவட்ட சாரண சங்கத்தினால் சரணீய ஸ்தாபகர் பேடன் பவல் அவர்களின் ஞாபகார்த்த தினம் கரணவாய் மகாவித்தியாலயத்தில் சிறப்பாக கொண்டாடப் பட்டது.

வடமராட்சிப் பகுதியின் உதவி மாவட்ட ஆணையாளர் திரு. கோ. செல்வவிநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக உடுப்பிட்டி அ. மி. பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு. சா.ச. செல்லத்துரை கலந்துகொண்டார். பண்டிதர் இ. க. முருகேசு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். (ஆ)

### ஜி. ஜி. க்கு ப. நோ. கூ. ச அஞ்சலி

யாழ்ப்பாணம், சனி

வலி. கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழுக்கூட்டத்தில் மறைந்த தமிழ்த் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவுகுறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு நிமிட மௌன அஞ்சலிசெலுத்தப் பட்டதோடு, அன்னார் குடும்பத்தினருக்கு ஓர் அனுதாபச் செய்தியும் அனுப்புவதாகத் தீர்மானிக்கப்பட்டது. (ஆ)

# "தமிழ் மாணவர் தொகைக்கேற்றபடி நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்"

## அ. இ. தமிழர் ஆசிரியர் சங்கம்கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

தமிழ் மாணவர்களின் தொகைக்கும், ஜனத்தொகை விகிதாசாரத்திற்கும் ஏற்ப தமிழருக்குரிய நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என்று அமைச்சர் சபையைக்கோரும் தீர்மானம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கசெயலவைக்கூட்டத்தில் நிறைவேறியது.

யாழ்ப்பாணத்திலுள்ள சங்கப்பணிமனையில் திரு.டி. எஸ். கே. வணசிங்கா தலைவையில் நடந்த இக்கூட்டத்தில், தமிழ் மாணவர் நியமனப்பிரச்னைபற்றிய மகஜரை, சங்கப்பொதுச் செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம் மூலம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்குவேண்டிய புள்ளி விபரங்களை ஆய்வுக்குழு சேகரித்துக் கொடுக்கவேண்டும்என வும், ஆய்வுக்குழு செய்த சிபார்சைச் செயலவை ஏகமனதாக ஏற்று வட்டார ரீதியாகவும், மாவட்டரீதியாகவும், தமிழ்மாணவர்தொகை, ஆசிரியர்தொகை. பாடசாலைகள், கல்வி அலுவலகர்கள்போன்ற விபரங்களை மார்ச் 10-ந் திகதிக்கு இடையில்சேகரிக்குமாறு பணிப்பதென்றும் தீர்மானித்தது. இதன்படி ஒரு சுற்றறிக்கையையும் படிவங்களையும், அகில இலங்கையிலுமுள்ள 50 கிளைச்சங்கங்களினதும், 12 மாவட்டச் சங்கங்களினதும், நிர்வாகிகளுக்கும் ஆய்வுக்குழுவின் நிர்வாகச்செயலாளருக்கு அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

### ஜி. ஜி.க்கு அனுதாபம்

கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேறின. தமிழ் மக்கள் ஒன்று திரண்டு உரிமைக் குரல் எழுப்பும் இந்நேரத்தில் தமிழ்த் தலைவரும் சட்டத்திலேயே இனத்தின் விடுதலைக்கு சட்டம் கண்டு வாதாடிப் பெரும்புகழ் ஈட்டிய சட்ட மேதையுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவு ஈடுசெய்முயடியாத பேரிழப்பாகும.

பொதுப்பயிற்சி (தமிழ்) பெற்ற ஆசிரியர் பற்றாக்குறையில் ஆரம்பக் கல்வியில் ஆட்டம் காணும்நிலை உருவாகத்தொடங்கியுள்ளதால் புதிய நியமனங்களில் தராதரப்பத்திரமற்ற தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதுடன்,ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கும் பொதுப் பயிற்சிக்கு மாணவர்களிலிருந்தும் குறிப்பிட்ட தொகையினர் தெரிவுசெய்யப் படவேண்டும்.

மலையகத் தமிழ் மாணவர்களின் கல்வி நலன், வேலைவாய்ப்புகள் போன்றவிடயங்கள் பற்றி அங்குள்ள தொழிற்சங்க, பொதுஸ்தாபனப் பிரமுகர்களுடன் கிளைச்சங்க மாவட்டசங்க நிர்வாகிகளையும் அழைத்து ஆராயவேண்டும். தலைவர், பொதுச்செயலாளர் இக்கருத்தரங்கில் கலந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து செயலவைக்கு எடுத்துக் கூறவேண்டும்.

தோட்டப் பாடசாலைகளிற் பல அரசினர் பாடசாலையாக மாறும்போது, அல்லது தோட்டப்பாடசாலை மாணவர் வேறு அரசினர் பாடசாலைகளுக்கு மாற்றப்படும்போது அவர்களுடைய சூழல், இருப்பிடம், தூரம் போன்ற பல விஷயங்களும் கவனிக்கப்பட்டு அவர்களின் கல்வி வசதி எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டிய ஆலோசனைகளைச் சங்கம் விரைவில் அமைச்சுக்கு வழங்க வேண்டும்.

சேவையிலுள்ள சகலபட்டதாரி ஆசிரியர்களுக்கும் பட்டதாரிச் சம்பளம் வழங்க வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட சில பதவிகட்கு ஒரே திகதியில் நியமனங்கள் வழங்கும்படி அமைச்சு அறிவித்தாலும் சில மாவட்டங்களில் அரசியல் வேறும் காரணங்களால் அவ்வாறு செய்யாது காலம் கடத்தி நியமனங்கள் வழங்குவதால், சம்பளம், உயர்ச்சி, சேவை மூப்பு போன்ற பல விடயங்களில் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே எதிர்காலத்தில் அவ்வாறு நடவாது சகல மாவட்டங்களிலும் ஏககாலத்தில் நடைபெற ஆவன செய்யவேண்டும்.

### பிரதமருக்கு குருமார் பாராட்டு

ஆனைகோட்டை,வெள்ளி

தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா நடவடிக்கை எடுத்துள்ளதையிட்டு தேசிய மதகுருமார் சபையினர் அவருக்குபாராட்டு தெரிவித்துள்ளனர். (இ)

எவர்சில்வர் சமையல் பாத்திரம்
கிடைக்குமிடம்:
சென்றல்அந்தனீஸ்
ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516,ஸ்கின்னேர்ஸ் ரோட் தெற்கு
கொழும்பு-10

# திருட்டுக் குற்றத்தை இருவர் ஒப்புக் கொண்டனர்

மாவிட்டபுரம்,வெள்ளி

லொறி உதிரிப்பாகக் களவு குறித்துக் கைதான3நபர்களில் இருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அவர்களுக்குத் தண்டனை வழங்குவது அடுத்த மாதம் 7ம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன், குற்றத்தை ஒப்புக்கொள்ளாத நபர் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு அவர் மீதான விசாரணைபின்போடப் பட்டது.

மயிலிட்டியைச் சேர்ந்த துரைசாமி விஜயரத்தினம் என்பவரது லொறியிலிருந்து 6000 ரூபா பெறுமதியானஉதிரிப் பாகங்கள் திருடப்பட்டது தொடர்பாகக் காங்கேசன் துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட பளையைச் சேர்ந்த சம்சுதீன் சுலைமான், வசாவிளானைச் சேர்ந்த குமாரசாமி பாலன், மயிலிட்டியைச் சேர்ந்த இராமசாமி வல்லிபுரம் ஆகியோர் மல்லாகம்நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

அச்சமயம் 1ம், 3ம் சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அவர்களுக்குத் தண்டனை வழங்குவது மார்ச் 7ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது. மற்றைய நபர் சுற்றவாளிஎனக் கூறியதால்அவரை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து அவர் மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (அ)

# தந்தைசெல்வாவின் பாதையைவிட்டுவிலகோம்

## தமிழ் ஈழ இலட்சியத்தை உலகுக்குணர்த்தும் சர்வஜன வாக்கெடுப்பே தேர்தல்

### மாவை. சேனதிராஜா கூறுகிறார்

மாவிட்டபுரம், வெள்ளி

''தந்தை செல்வா ஈழத்தமிழினத்தின் தமிழர் இலட்சியத்தின் சின்னம் மட்டுமல்ல உலகத்தமிழ் இனத்திற்குமே வழிகாட்டும் சக்தி மிக்க தலைவர். அவருக்கு அடுத்தபடியாக அண்ணன் அமிர்தலிங்கம் தமிழினத்தை வழிநடத்தும்தலைவராக விளங்குகிறார். இவர்களது தலைமையில் நம்பிக்கை வைத்து என்னதியாகத்தையும் செய்து தமிழ் ஈழ இலட்சியத்தை அடைவதற்கு நாம்சத்தியம் செய்து விட்டோம். இந்நிலையில் வேறு இயக்கங்களில் ஈடுபடுவதோ, தேர்தலில் போட்டியிடுவதோ எமக்கு நோக்கமுமில்லை; அந்த அவசியமுமில்லை. ஒரே கொடி, ஒரே அமைப்பு என்ற அடிப்படையில் தமிழ் ஈழத்தை அடைவதே எமது நோக்கமாகும். தந்தை செல்வாவின் பாதையைவிட்டு நாம் விலகமாட்டோம்''

இவ்வாறு சிறை மீண்ட இளைஞர் மாவை. சேனதிராசா காங்கேசன்துறை இளைஞர்பேரவையினர் தமக்களித்த தேநீர் விருந்துபசார வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. சிவமகாராசா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் 'தந்தை செல்வாவின் பாதையைவிட்டு வேறு பாதையில் திரும்புக' என திரு. வி. கந்தரலிங்கம் விடுத்துள்ள அழைப்புக்குப் பதிலளிக்கும் வகையில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சேனதிராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''சிறையிலிருந்து மீண்டதிலிருந்து எம்மைப் பல்வேறு பிரச்னைகள் எதிர்நோக்கினலும் தேர்தல் பிரச்னையே பெரும் பிரச்னையாக மாறியிருக்கிறது.

''தேர்தலினுல் எமது காலம் வீணுகிப்போய் எமது பாதையிலும் சிறிது தடங்கல் ஏற்படலாம். ஆனல் தேர்தலையும் நாம் எதிர் நோக்கவேண்டித்தான் உள்ளது. இத்தேர்தல் நடக்காமல் நாம் பகிஷ்கரிக்கலாம். ஆனல் தமிழ் ஈழ இலட்சியத்திற்கான சர்வசன வாக்கெடுப்பாக இத்தேர்தலை பயன் படுத்த மிடிவு செய்துள்ளோம்.

''தமிழ் ஈழத்தைப்பெறுவது இந்தத் தேர்தல் மூலமோ அல்லது ஜனநாயக பாராளுமன்ற முறைகளிலோ சாத்தியமில்லையென்றே நாம் கருதுகிறோம். தியாகத்தின் மூலமே இந்த உயர்ந்த இலட்சியத்தைக் கட்டியெழுப்பமுடியும். இதற்கு எத்தியாகத்திற்கும் தயாரான இளைஞர்கள் வேண்டும். அகிம்சை வழியில் நாம் நம்பிக்கை இழந்திருக்கிறோம். ஒரு நாட்டை -மண்ணை -மக்களை- ஆட்சியைப் பாதுகாக்க படை பலம் தேவையென்பதுதவிர்க்க முடியாதது. ஆகவே எந்தப் படை பலத்தையும் தாக்குப் பிடிக்கும் சக்தியை நாம் பலப்படுத்திக் கொள்ளவேண்டும்.

#### கூட்டணியைப் பலப்படுத்தவேண்டும்

'தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பலப்படுத்தவேண்டும். தமிழ் இளைஞர் பேரவையை ஒரு சக்தி மிக்க இளைஞர் அணியாக மாற்றவேண்டும். இந்த இலட்சியத்தை அடையும்வரை வேலைத் திட்டங்களை வகுத்துச் செயல்படவேண்டும் என்பனபற்றியெல்லாம் சிறையில் சிந்தித்துத் திட்டங்கள் தீட்டி வெளியேறியிருக்கிறோம். தற்போது இந்நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியிருக்கிறோம்.

#### தந்தை செல்வாவை புறக்கணியோம்

இந்நிலையில் எங்களைத் தேர்தலில் போட்டியிடுமாறு கேட்பது இளைஞர்கள் மத்தியில் வீண் சலனங்களை உருவாக்கியுள்ளது. தேர்தலில் போட்டியிடுவது எமது நோக்கமல்ல. அத்துடன் தந்தை செல்வாவின் தலைமையைப் புறக்கணிப்பதிலும் எமக்கு உடன்பாடில்லை என்பதை திரு. சுந்தரலிங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'இன்றைய நிலையில் தமிழினத்தின் ஒற்றுமைதான் மிக அவசியம். தமிழ் இளைஞர்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இயங்கவேண்டும். எதிர்காலத்தல் தமிழ் ஈழத்தில் சிங்கள ஏகாதிபத்தியம் ஒன்று தேர்தலை நடத்தாமல் தமிழினம் தன்னைத்தானே ஆளும் நிலையை உருவாக்க இளைஞர்கள் முன்வரவேண்டும்.

#### தலைவர்கள் வழிகாட்ட இளைஞர்கள் போராடவேண்டும்

'வரும் தேர்தலை தமிழ் ஈழ இலட்சியத்தை உலகுக்கு எடுத்துக்காட்டும் வாக்கெடுப்பாகப் பயன்படுத்த இளைஞர்கள் தீவிரமாக இயங்கவேண்டும். அதேவேளையில் தமிழ் ஈழ விடுதலைப் போருக்குத் தம்மை அர்ப்பணிக்கும் பணிகளில் ஈடுபடவேண்டும். சிங்கள சமூகத்திலே எத்தனை இளைஞர்கள், இளம் பெண்கள் தியாகம் செய்துள்ளனர். ஆனல் எம் மத்தியில் எத்தனைபேர் உள்ளனர் என்பது கேள்விக்குறியாக உள்ளது. தலைவர்கள் திட்டங்கள் தீட்டி பாதையைக் காட்ட வேண்டும், இளைஞர்கள் போராடவேண்டும். அப்போது தமிழ் ஈழம் அதிக தாரத்திலில்லை.' (அ)

---

நவாலி மகாவித்தியாலய

## ஆசிரியை, அதிபர் திடீர் இடமாற்றத்துக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், சனி

நவாலி மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த ஓர் ஆசிரியை திடீர் மாற்றம்செய்யப்பட்டதை ஆட்சேபித்து பெற்றோர்-ஆசிரியர் சங்கம் கல்விஅமைச்சுக்கு மகஜர் அனுப்பியுள்ளது.

பிரஸ்தாப ஆசிரியை இக்கல்லூரியின் வளர்ச்சியில் அயராது உழைத்தவர் என்றும், அவரது சேவை இங்குதேவைப்பட்டபோது கல்விஇலாகா திடீரென இவரை இடம்மாற்றிவிட்டதாகவும் இந்த ஆசிரியையை இங்கு மீண்டும் நியமிப்பதன் மூலம் மாணவர்களின் கல்வி வளர்ச்சி உயரும் என்றும் பெற்றோர் ஆசிரியர்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் மேற்படி பாடசாலை அதிபர் திருமதி எஸ். ஆறுமுகராசாவும் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளதையும் பெற்றோர் - ஆசிரியர் சங்கம் கண்டித்துள்ளது.

இவர்களை மீண்டும் இங்கு நியமிக்கும்படி கல்விஅமைச்சின் செயலாளர் திரு. பிரேமதாசா உடகமவை பெற்றோர் ஆசிரியர் சங்கம் அண்மையில் பேட்டிகண்டது. (ஆ)

---

## 'இளவாலையில் இலவச ஆஸ்பத்திரி வேண்டும்

### பண்டத்தரிப்பு கி. ச. கோரிக்கை

பண்டத்தரிப்பு, வெள்ளி

வைத்திய வசதிகளற்ற கிராமமான இளவாலையில் இலவச ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி ஆணையாளரை பண்டத்தரிப்பு கிராமசபை வேண்டியுள்ளது.

இதுசம்பந்தமான தீர்மானமொன்று இம்மாதம் 21-ம் திகதி நடைபெற்ற பண்டத்தரிப்பு கிராமசபையின் விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கிராமசபை உபதலைவர் திரு. நீ. பி. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கிராமசபைப் பகுதியிலுள்ள வசதியற்ற ஏழைப் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்களை கிராம சபை வழங்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது. (ஆ)

---

## கொக்குவில் இணக்கசபை

பண்டத்தரிப்பு, வெள்ளி

கொக்குவில் கிராமசபை பிரதேசத்திற்கான இணக்கசபை உறுப்பினர்களை பிரதி நீதி அமைச்சர் திரு.எம்.எம். முஸ்தாபா நியமித்துள்ளார். மொத்தம்29 அங்கத்தவர்களைக் கொண்ட இந்த இணக்கசபையின் தலைவவராக இளைப்பாறிய கல்லூரி அதிபர் தி. இ. கந்தையா நியமிக்கப்பட்டுள்ளார் உறுப்பினர்களின் விபரம் பின்வருமாறு:

திருவாளர்கள்: எஸ். சங்கரசிவம், ஆர். செல்வராசா, கே. எஸ். நடராசா, தம்பு இராசதுரை, வி. எம். நடராசா, கே. குமாரசாமி, எஸ். எம். ஆறுமுகம், எஸ். சண்முகநாதன், பீ. தம்பி, வி. ஆறுமுகம், கே. கே. இரத்தினம், ரீ. சோமசுந்தரம், எம். பொன்னையா, சீ. பொன்னம்பலம், எஸ். சற்குணம், எஸ். இரத்தினசபாபதி, சீ. கனகசபை, எம். கைலாசநாதன், ஏ. திருநாவுக்கரசு, என். பி. சுப்பிரமணியம், எஸ். முத்துத்தம்பி, எஸ். தம்பாபிள்ளை, ஐ. பரமேஸ்வரன், க. கிருபானந்தம், நா. வீரசிங்கம் சி. சுப்பையா, பொ. குமாரசாமி இ. புஷ்பராசா, கே.வி. சற்குணம். (ஆ)

---

## இலங்கை வானொலி

### புதிய டைரக்டர் சபை நியமனம்

கொழும்பு, வெள்ளி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 5 உறுப்பினர்களைக் கொண்ட புதிய டைரக்டர் சபை நியமிக்கப்பட்டுள்ளது.

சங். ஞானவன்ச தேரோ, திரு. எம். சிவநாதன், திரு. திஸநாயக்கா, ஜனப் உவைஸ் திரு. டபிள்யு.ஆர். பி.திலகரத்தின ஆகியோரே புதிய டைரக்டர்களாவர். திரு. திலகரத்தின புதியசபையின் தலைவராக இருப்பார். (ஆ)

......

## பாரம்பரியத்தை மீறுதிர்

மாவிட்டபுரம், வெள்ளி

''கிராமத்தில் மையமொன்று இருக்கும் பட்சத்தில் கிராம மக்கள் எவரும் எந்தத் தொழிலும் ஈடுபடக்கூடாது'' என ஊறணி புனிதஅந்தோனியார் கிராம முன்னேற்றச் சங்கம் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

பாரம்பரியமாக எங்கள்கிராமத்தில் மையம் ஒன்று இருந்தால் அன்று கிராமமக்கள் எவரும் எந்தவிதமான தொழிலும் செய்யக்கூடாதென விதிஉள்ளதென்றும் அதை மக்கள் அனைவரும் கடைப்பிடித்து நடக்க வேண்டுமெனவும், இதை மீறுவோர் மீதுசங்கம்நடவடிக்கை எடுக்குமெனவும்இத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



**RIO** Daily 10-30, 4-45, 7-15, 9-45.
(Jaffna) Carol White – John Castle
in
**MADE**
(Strictly adults)

**Regal** Daily 4-45, 7-00 & 9-30 P. M.
(Jaffna) Roger Moore in
**The Man Who Haunted Himself**
(Color)

See it today THE MAN WHO HAUNTED HIMSELF
See it from the beginning and feel the shock
Don't tell your friends the Ending
Who is chasing Roger Moor
Who are the women in Roger Moor's life
What do they talk about Roger Moor
To findout answers visit Regal Cinema today

**ஸ்ரீதர்** எம். ஜி.ஆர். - மஞ்சுளா
சந்திரகலா -லதா
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் நடித்த
**உலகம் சுற்றும் வாலிபன்**

அடுத்த வெளியீடு! 11-3-77 முதல்
சிவாஜி -- ஜெயலலிதா
(இருவேடம்) நடித்த
**பாட்டும் பரதமும்**

**ராணி** கமலஹாசன் -- தீபா - சாவித்திரி
நடித்த
[யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
**அந்தரங்கம்**

**வின்ஸர்** கமலஹாசன் - ஸ்ரீவித்யா
[யாழ். நகர்] சுந்தரராஜன் ஜெயசுதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**அபூர்வ ராகங்கள்**

**ராஜா** கடைசி வாரம்
[யாழ். நகர்] ஜெய்சங்கர் - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**தாய்க்கு ஒரு பிள்ளை**

**வெலிங்டன்** எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
[யாழ். நகர்]
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**பணக்காரக் குடும்பம்**

**லிடோ** ஏ. வி. எம். ராஜன் - லதா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
**வீட்டுக்கு வந்த மருமகள்**

**மனோகரா** 5-வது 'ஹவுஸ்புல்' வாரம்
காட்சி நேரங்கள் குறிப்பிட
[யாழ்ப்பாணம்] முடியாமைக்கு மன்னிக்கவும்.
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ராதாசலூஜா
நிர்மலா
வீரப்பா
நடித்த
சத்யா மூவிஸ்
**இதயக்கனி**
[ஈஸ்மன் கலர்]



# யுவதி கிணற்றுக்குப்பலி!

நீர்வேலி, வெள்ளி

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த மாணிக்கம் சியாமளாதேவி என்ற 18 வயது யுவதி, தோட்டத்திலுள்ள மிளகாய்க்கன்றுக்குத் தண்ணீர்வார்க்கச்சென்ற போது, தவறுதலாகக் கிணற்றில் விழுந்து நீரில்மூழ்கிமரணமானர். மரணமானவரின் மூத்த சகோதரி சாட்சியமளிக்கையில், தமது சகோதரி சியாமளாதேவியை மிளகாய்க்கன்றுக்குத் தண்ணீர் ஊற்றுமாறு கூறவே, சகோதரி தண்ணீர் ஊற்றியதாகவும் கிணற்றில் சகோதரி விழுந்தசத்தம் கேட்டுத் தாம் அங்கேவந்துபார்த்த போது தண்ணீர் அள்ளும் பட்டை மேலே மிதப்பதைக் கண்டு அயலிலுள்ளவர்களை அழைத்து கிணற்றில் விழுந்த சகோதரியை மரணித்த நிலையிலேயே வெளியே எடுத்ததாகவும் கூறினர்.

......

## உணவுப்——

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யதாவது:

### வயல்களுக்கு நேரே செல்லுங்கள்

''வயல்களுக்கு நேரடியாகச் சென்று தனியார் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வதினுல்தான் வெளிச்சந்தையில்உணவுப்பொருட்களின் விலையில் அதிகரிப்பு காணப்படுகிறது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு ப. நோ. கூ. சங்கங்கள் தீவிரமாகக் களத்தில் இறங்கி விவசாயிகளிடமிருந்து நேரடியாக உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### இலங்கை பாலைவனமாக மாறும் அச்சம்

காடுகளில் மரம் வெட்டுவதைநிறுத்திக்கொள்ளுங்கள். ஒருமரம் மட்டும் வெட்டுவதற்கு அனுமதிவழங்கப்படும் போது பல மரங்களை வெட்டுவதாக புகார்கள் கிடைக்கின்றன. மலைநாடுகளில் கடல்நீர் மட்டத்திலிருந்து 5000 அடி உயரமான மலைகளில் மரங்கள் வெட்டப்படக்கூடாது என்று சட்டமிருந்தும் இது மீறப்படுகிறது. இதனுல் இலங்கை மிகவிரைவில் பாலைவனமாக மாறிவிடும் என்பதில் சந்தேகமில்லைமரங்களைவெட்டுவதைத் தடுப்பதற்கு கடுமையான சட்டங்களை கொண்டு வரவேண்டிய நிலமையை ஏற்படுத்த வேண்டாம்.

### கடல் அரிப்பு

முருகக்கற்களை வியாபார நோக்கத்துடன் தோண்டிஎடுக்கப்படுவதால் கடல் அரிப்பு அதிகமாகிறது. இவற்றைக் குறைக்க அரசாங்க அதிபர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். டைனமைற் மீன்பிடிப்பு நிறுத்தப்படவேண்டும். இதனுல் மீன்உற்பத்தி பாதிக்கப்படுகிறது. (ஆ)

**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவகுமார்–ஜெய்சித்ரா
**தேன்சிந்துதே வானம்**

**நாகம்ஸ்**
[சுன்னுகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
உயாலி — ஐயர்
**கோமாளிகள்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர். – ஜெயலலிதா
**தனிப்பிறவி**

# கோப்பாய் விளையாட்டுவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

விளையாட்டு அமைச்சின் ஆதரவின் கீழ் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கிராமசேவகர் பிரிவுகளுக்கிடையேயான விளையாட்டுவிழா இன்று அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டரங்கில் நடைபெறும் கரபந்தாட்டப் போட்டியுடன் ஆரம்பமாகிறது இதைத் தொடர்ந்து பிரிவின் ஏனைய பகுதிகளில் எல்லே, உதைபந்தாட்டப் போட்டிகள் இடம் பெறவிருக்கின்றன. ஏப்ரல் 23–24ம் திகதிகளில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

போட்டிகளில் வெற்றி ஈட்டும் கழகங்களை கௌரவிக்கும் முகமாக பரிசில்கள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை உதவி அரசாங்க அபர் திரு.கே. மாணிக்கவாசகர கவனித்து வருகிருர்.

அப்பகுதி விளையாட்டு அதிகாரி திரு.எஸ். மரியதாஸ் இந்த விளையாட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை கவனித்து வருகிருர்.

இப்பிரிவில் மேற்படி விளையாட்டுகளுக்கான பயிற்சி வகுப்புக்களும் விளையாட்டு அமைச்சின் விற்பன்னர்களால் நடத்தப்படுமென்று திரு.மரியதாஸ் தெரிவித்தார். (இ)

# ''இலக்கியத்தை எடைபோட திருக்குறளே உரைகல்''

## அசோகமித்திரனுக்கு இரசிகமணி கருத்து

யாழ்ப்பாணம், சனி

நாவல் நூற்றுண்டு விழாவில் கலந்து கொள்ள, தென்னகத்திலிருந்தும் வருகைதந்த எழுத்தாளர் அசோகமித்திரன், வளாக விரிவுரையாளர்கள் சிலருடன் இரசிகமணி வீட்டுக்கு வந்து இலக்கிய உரையாடலில் ஈடுபட்டார். இரசிகமணியும் இரசனைசொட்ட சம்பாதித்தார்.

கைலாசபதியின் கட்டுரையில் தர்மம் பற்றிக் குறிப்பிடப்பட்ட அம்சம் தமக்கு உவகை தருவதாகக் கூறிய இரசிகமணி திருக்குறளை உரைகல்லாகக் கொண்டே தாம் எதையும் எடை போடுவதென்றும் ஆக்க இலக்கியங்களுக்குப் பொருள் முக்கியமென்றும் உத்திகளை மிகைப்படுத்தி வியப்பதில்லை என்றும் கூறினர். புதுக்கவிதைகள் பற்றி உரையாடும் போது கவிதைகளைப் பொறுத்தவரை தமிழ் தொல்காப்பியர் காலம் தொட்டு இன்றுவரை வளமாக வளர்ந்துள்ளது என்றும் எனவே எமது முறைகளை மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டுமேதவிர புதுக்கவிதைகள் என்று சொல்லப்படும் 'வசனங்களை' நாம் வரவேற்கத் தேவையில்லை என்றும் இரசிகமணி கூறினர். ஆய்வுக் கட்டுரைகளில் ஈழ த்து நாவல்கள் பற்றிக் கூடிய அளவு குறிப்பிடப்படாதது ஏன் என்றும் வினவினர். நூற்றுண்டு விழாமுயற்சியை பாராட்டியும் பேசினர். தம்மை சந்தித்தமைக்கு அசோகமித்திரன், ஆசிச்செல்வன் உட்பட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். ]அ]

......

## வருடாந்த வீதிஉலா

யாழ்ப்பாணம், சனி

கொழும்புத்துறை கிழக்கு ஐயனர்—அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று நடைபெறுகிறது. மாலை 6–30 மணிக்கு சுவாமி வீதி உலா வருவார். (இ)

## ஏன் இப்படி நடக்கிறது?

வேலணை, வெள்ளி

யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கத்தின் வேலணைக் கிளையில் அதிகமான கைத்தறி சாறிகள் இருந்தும் அவற்றை விற்பதற்கு அங்குள்ள ஊழியர்கள் மறுத்துவருகின்றனராம். விற்க மறுப்பது பற்றி அவர்களை மக்கள் கேட்டபோது அது மேலிடத்து உத்தரவு என்று கூறுகின்றனராம். இதன் அர்த்தம் புரியாமல் மக்கள் திகைக்கிருர்கள். [ஆ]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்–கொக்குவில் கிழக்கு, கனகசபை
கைம்பெண் சோதிப்பிள்ளை

வழக்காளி

இல. M. B. 12198

எதிராக

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 1. நாகமணி சுப்பிரமணியம் |
| வண்ணர்பண்ணை கிழக்கு | 2. பெண் திலகவதி |

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 12198–ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1977–ம் ஆண்டு மார்ச் (பங்குனி) மாதம் 2–ந் திகதி (2–3–77) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 4554/–ம், இதில் ரூபாய் 2300/–க்கு 26–12–70 திகதி தொடக்கம் 13–6–73 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 646–20 சதமும். இதில் ரூபாய் 600/–ம் மேலும் ரூபாய் 750/–ம் மேலும் ரூபாய் 950/–ம் இறுபட்டது.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்யாழ்ப்பாணப் பகுதி வண்ணர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணர்பண்ணை வடகிழக்கிறை ''இத்திக்கிணற்றடியும், தித்தித்தறையும்'' நிலப்பரப்பு இரண்டும் (2) குளி 2ம், செய்பயிர் வான்பயிர்களும் (இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் யே. மனுவல் என்பவரால் 10–9–1955ல் 690–ம் இலக்கப் படத்தில் விபரிக்கப்பட்டது) எல்லை: கிழக்கு வயிரவர்கோவில் ஆதனம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு சோமசுந்தரம் மார்க்கண்டுவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம் இதடங்கலும், இன்னும் தெற்கேயிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழி வாய்க்கால் உரித்தும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
ஏலவிற்பனையாளரும்.

தெல்லிப்பழை,
2–1–1977.

5562

ஈழநாடு

The EELANADU

## "இடதுசாரிகள் சரியான வழிகாட்டவில்லை"

கொழும்பு, வெள்ளி

'இந்த நாட்டிலுள்ள இடதுசாரிகள் சரியான வழியில் மக்களை வழிநடத்திச் செல்லவில்லை. நாட்டின் சோஷலிச அமைப்புக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் அவர்கள் வழிகாட்டவில்லை.'

புதியநகரமண்டபத்தில் நடந்த கூட்டத்தில் பேசிய மகாஜன விமுக்தி பெரமுனையின் பொதுச்செயலாளர் திரு. மகிந்தா விஜயசேகரா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. விஜயசேகரா 71-ம் ஆண்டு கிளர்ச்சிதொடர்பாக, பாதுகாப்பில் வைக்கப்பட்டு விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

திரு. விஜயவீரா தொடர்ந்து கூறியதாவது:

'எமது கட்சி மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு ஆட்சி மன்றத்தை மட்டும் நம்பியிருக்கவில்லை. அதிகாரமும் ஆட்சியும் மக்கள் கைக்கு மாற்றப்படவேண்டும்.

'தொழிலாளரை, விவசாயிகளை, இளைஞர்களை, மாணவர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளுக்குத் தனித்தனியே தீர்வுகாண முடியாது. இப்பிரச்னைகளுக்கு பொதுக்கொள்கைகளை வைத்து பொதுவான தீர்வுகாணப்படவேண்டும்.' (கு-அ)

## தமிழாராய்ச்சி மன்ற நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், சனி

அனைத்துலகத் தமிழாராய்ச்சிமன்றஇலங்கைக் கிளையின் நூல்வெளியீட்டுவிழா இன்று 5 மணிக்கு யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தமிழாராய்ச்சி மன்றத்தின் ஸ்தாபகர் வணசேவியர் தனிநாயகஅடிகள் சிறப்புரை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணத்தில் 74 ம் ஆண்டு நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் கட்டுரைகளின் தொகுதியே இன்றுவெளியிடப்படவிருக்கிறது.

தமிழ்நாடு, இலங்கை, புதுடில்லி மற்றும் பல நாடுகளை சேர்ந்த அறிஞர்களின் நாற்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகள், இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. பிரதிஒன்றின் விலை 40 ரூபாஎன அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

### செல்வா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் பேரவை கருதுவதாகத் தெரிகிறது.

குழுமுன் ஆராயப்பட்டு பொதுச்சபையைக்கூட்டி ஏற்றுக்கொண்டபின் தமிழர் விடுதலைக்கூட்டணியிடம் சமர்ப்பிக்கப்படும் என்று சொன்னர். (ஆ)

### யாருடையவை?

யாழ்ப்பாணத்தில் கண்டெடுக்கப்பட்டு இதுவரை உரிமை கோரப்படாத பின்வரும் பொருட்கள் ஈழநாடு காரியாலயத்தில் உள்ளன. உரியவர்கள் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

பொருட்களின் விபரம்:

7 கூப்பன்கள், ஒரு பேர்ஸ், 7 பெரிய.சிறிய திறப்புக்கோர்வைகள், அவசரகாலப்பத்திரம், 3 அடையாள அட்டைகள், தொழிலாளர் காங்கிரஸ் அறிமுக அட்டை, அடைவு துண்டு ஒன்று.

### காசி ஆனந்தன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி மகஜர் அடுத்த மாதம் அக்கரைப்பற்றில் நடைபெறும் த. வி. கூட்டணி நடவடிக்கைக் குழுவின் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரியவருகிறது. (அ)


## மரண அறிவித்தல்

### திருமதி கே. வி. சின்னத்துரை

காலஞ்சென்ற வழக்கறிஞர் கே. வி. சின்னத்துரையின் அன்புப்பாரியாரும், ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த கே. வி. எஸ். கதிர்காமநாதன், மங்கயற்கரசி சின்னத்துரையின் அன்புத்தாயாரும், அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த கே. வி. எஸ். கதிரமலைநாதன், இலங்கை வங்கியைச் சேர்ந்த நாகபூசணி தியாகராசாவின் பெரிய தாயாருமாகிய திருமதி கே. வி. சின்னத்துரை காலமாகிவிட்டார். அன்னரின் பூதவுடல் 'நாதன்ஸ்' கோப்பாய் இல்லத்திலிருந்து இன்று சனிக்கிழமை மூன்று மணியளவில் செம்மணி மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

5570


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O Box 49, Jaffna) Telegram: Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.

'ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால்

# ப. நோ. கூ. ச. தராதரமற்ற நியமனம்பற்றிவிசாரிப்போம்'

யாழ்ப்பாணம், சனி

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் மற்றும் இலாகாக்களிலும் எதுவித தராதரமுமின்றி பின் கதவால் பலர் பதவி பெற்றுள்ளார்கள். இவர்களின் நியமனங்கள் பற்றி விசாரணை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் நடவடிக்கை எடுப்போம்.

மானிப்பாய் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய அமைப்பின் புதிய அங்கத்தவர் மத்தியில் கட்சி அமைப்பாளர் திரு. எஸ். அலோசியஸ் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. அலோசியஸ் மேலும் கூறியதாவது:-

பின் கதவால், எவ்வித தராதரமுமின்றி பதவியில் இருக்கும் நண்பர்கள், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வரப்போகிறதென்பதை அறிந்து எம்மிடம் வந்துகொண்டிருக்கிறார்கள். அரசியல் காற்று திசை மாறுவதை அறிந்து, நம்முடன் சேர்ந்து நல்ல பிள்ளைகள் போல் இவர்கள் நடிப்பார்கள். இவர்கள் விடயத்தில் நாம் கவனமாக இருக்கவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி கூட்டத்திற்கு வெடி வீசியதை, கூட்டத்தைக் குழப்ப முற்பட்டதை, பங்கீட்டு பொருட்களைப் பதுக்கி பாவனையாளர்களுக்கு பலவிதத்திலும் தொல்லை கொடுத்ததை எமது கட்சி அங்கத்தவன் என்ற காரணத்திற்காக, வேலை நீக்கப்பட்டதை, வேலை மறுக்கப்பட்டதை, பயமுறுத்தப்பட்டதை நாம் இன்னும் மறக்கவில்லை. நாம் ஆட்சிக்கு வந்த பின்பும் மறக்கப்போவதில்லை. இச்சம்பவங்கள் எல்லாம் எமது நெஞ்சத்தில் நீங்காத நினைவாக இடம் பெற்றுவிட்டது.

ஜனநாயக வழியில் நம்பிக்கைகொண்ட நாம் இவ்வளவு அக்கிரமங்கள் நடந்தும் பொறுத்துக்கொண்டிருக்கிறோம். காலம்வரும் பதில் சொல்வோம்.

இன்றைய தமிழ் இளைஞர்களின் உள்ளக்கிடக்கைகள் எமக்குத் தெரியும். நாம் ஐக்கிய இலங்கையில் இன்னமும் நம்பிக்கை வைத்துள்ளோம். எமது ஆட்சி உருவானதும் தரப்படுத்தல் நீக்கப்படும், தகுதியின்மைகள் அகற்றப்படும், இரண்டாம்தரப் பிரஜைகள் என்ற முறை நீக்கப்படும்.

தமிழ் மாணவரின் குறைகள் தமிழ் பேசும் மக்களின் குறைகள் நீக்கப்படும்.

பொதுச் செயலாளர் திரு. எஸ். சோமசுந்தரம், பொருளாளர் நாயகம் ஆகியோரும் பேசினர். (க)

## பட்டினிப் பாதகத்தை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைநிறுத்தத்துக்கு முடிவு காணப்படாவிட்டால், பட்டினிப் பாதகத்தை நிறுத்தும் வகையில் பொதுமக்களின் போராட்டம் நடாத்தப்படும் என்று பொதுமக்கள் போராட்டக்குழு என்ற பெயரில் துண்டுப்பிரசுரங்கள் பெருமளவில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. சகபாடி ச. கந்தசாமி என்பவர் இந்த துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டுள்ளார். 1ம்திகதிக்குமுன் நிர்வாகத்தை வெளியேறுமாறும் இதில் கேட்கப்பட்டுள்ளது.

நமது சங்கானை நிருபர் பின்வருமாறு அறிவிக்கிறார்.

தமது தொகுதியில் இருக்கும் சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த பல நாட்களாக நடைபெற்று வரும் ஊழியர் வேலை நிறுத்தம் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கீட்டுப் பொருட்களைப்பெற்றுக்கொள்ள முடியாமல் கஷ்டம் அனுபவிப்பதாகவும் இதில் உடனடியாக தலையிட்டு பொது மக்களின் கஷ்டத்தை நீக்குமாறும் கோரி எட்டுக் கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராச பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அவசரத்தந்தி அடித்துள்ளார்.

நிர்வாகத்தை மாற்றுவதன் மூலம் இதற்கு நிரந்தர தீர்வு காணலாம் என்று அவர் அத்தந்தியில் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

## அவசரத்தில் கொடுத்த பரிசு

கொழும்பு, வெள்ளி

உல்லாசப் பயணிகளுக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட பஸ் ஒன்றில் பிரயாணம்செய்த மேற்கு ஜெர்மன் பெண் பிரயாணி ஒருவர் அந்த பஸ்ஸின் கண்டக்டரின் நேர்மையைக்கண்டுபூரித்துப்போனர். அந்தக்கண்டக்டரின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தது போதாதென்று பணமாக ரூபா 400 பரிசும் கொடுத்தார்.

இரு தினங்களுக்குமுன் கொழும்பில் இந்தச் சம்பவம் நடந்தது. இந்த விசேஷ பஸ்ஸில் பல இடங்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பிவந்த 56 வயதான திருமதி எடித் எவச்ஸிமன் என்ற அந்த உல்லாசப்பிரயாணி தமது கைப்பையைக் காணமல் திகைத்தார். பஸ் கண்டக்டரிடம்விசாரித்தார். கைப்பை அவரதுஹோட்டல் அறையில் சேர்க்கப்பட்டுள்ளதாக கண்டக்டர் சொன்னர். இதைக்கேட்டதும் தான் அந்த அம்மையார் பூரித்துப்போய் மேற்படி பரிசுகளை கண்டக்டருக்கு வழங்கினர். அனல் ஹோட்டலில் சென்று பையைப் பார்த்துவிட்டு ஏங்கிப்போனர் திருமதி எடித். பைக்குள்ளிருந்த ரூபா 7500 பெறுமதியான பென்டனையும் 300 மார்க்நோட்டுக்களையும் காணேம்.

பொலிசில் புகார்செய்யப்பட்டது. இரகசியப் பொலிசார் நடத்திய தேடுதலில் கண்டக்டரிடமே அந்தப் பொருட்கள் பத்திரமாக இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

பாவம் பிரயாணி அவசரப்பட்டு தாம் அந்தக் கண்டக்டருக்கு பரிசு கொடுத்து விட்டதை எண்ணி கவலைப்பட்டார் அவர்.

### எமது இளைஞர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜெயராசா, சிவஜெயம், சுகர்சன், வசந்தன் ஆகியோரும் மற்றும் முக்கியஸ்தர்களான தங்கவேலாயுதம், பொன் வேணுதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் கவிஞர் காசி ஆனந்தன் மேலும் பேசியதாவது:

''கல்லடி, கல்லடி உப்போடை, நொச்சிமுனை, மஞ்சந்தொடுவாய், ஆரையம்பதி ஆகிய கிராமங்கள் தமிழின விடுதலை வீரர்களைஈன்றெடுத்த கிராமங்கள். இப்பகுதியில் தான் எனது தாயும் பிறந்தாள் இப்பகுதியில்தான் 1972-ம் ஆண்டுக்குப் பின்பு சிறைவாசம் அனுபவித்த கல்லடியைச் சேர்ந்த இளைஞர்களான ரமணன் யோசேப் ஜெயராசா ஆரையம்பதி தவராசா பரமதேவா தேவராசா நாகராசா தோமஸ் வடிவேல் பிறந்து வளர்ந்தவர்கள். இப்பகுதி மண் வீரம் செறிந்தது. தமிழ் இனத்தின் விடுதலைப் போரில் பத்து வீரர்களைச் சிறைக்கு அனுப்பிவைத்திருக்கிறது.''

இளைஞர் திரு. ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சட்டத்தரணி திரு. சாம். தம்பிமுத்து, சிவஜெயம் தங்கவேலாயுதம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

### கத்திமுனையில் சைக்கிள் அபகரிப்பு

ஆனைக்கோட்டை, வெள்ளி

இரு சிறுவர்களிடம் ஆயுதங்களைக்காட்டிப் பயமுறுத்தி அவர்கள் வந்த சைக்கிளை அபகரித்துக்கொண்டுசென்ற சம்பவம் ஒன்று யாழ். கச்சேரியடியில் நடைபெற்றது.

நேற்று முன்தினமிரவு 8-30 மணியளவில் யாழ். கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

கி. பாஸ்கரன், சிறிதரன் ஆகிய இருவரும் ஒரு சைக்கிளில் தமது வீட்டிலிருந்துபறப்பட்டுச்செல்லும்போதே இனந்தெரியாத இரு வாலிபர்கள் வேறு சைக்கிளில் வந்து கத்தி ஒன்றைக்காட்டி பயமுறுத்தி சுமார் ஆயிரம்ரூபா பெறுமதியான சைக்கிளை பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாக மேற்படி இரு சிறுவர்களும் யாழ். பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக பொலிசார் புலன்விசாரணைசெய்து வருகின்றனர். (இ)


## தேவை

பத்திரிகை விற்பனை, விநியோகப் பகுதியில் சேவை புரிவதற்கு ஸ்கூட்டர், மோட்டார்கார் வசதியுள்ளவர் 1-3-77 தொடக்கம் தேவை. விற்பனைப் பிரதிநிதிகளாக இருந்து அனுபவம் பெற்றவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும். விரும்புவோர் 28-2-77 திங்கட்கிழமை காலை 10 மணிக்கும் நண்பகல் 12 மணிக்குமிடையில் நேரில் வரவும்.

யாழ்ப்பாணம்

நிர்வாகி
'ஈழநாடு'